1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 31-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### குருத்துவ வெள்ளியூபிலி

கொழும்பு, நுகேகொடைக் குருத்துவமாணவர் கல்லூரியின் திருச்சபைச் சட்டப் போசிரியரான அதிவண. ஜீ. ஏ. குருசாமி சுவாமியவர்கள் தமது ஜனனபதியாகிய பத்தாவத்தை (இளவாலை) யிலுள்ள சம்பிலிப்புநேரியார் ஆலயத்தில் இம்மாதம் 17-ந் திகதி செவ்வாய்க்கிழமைகாலை 7-30 மணிக்குத் தமதுகுருத்துவ வெள்ளியூபிலியின் நன்றியறிதற் பாடற்பூசையொன்று நிறைவேற்றுவாரென அறிகின்றோம்.

### கல்லூரி விடுமுறை

சம்பத்திரிசியார் கல்லூரியின் மத்திய கோடைகால விடுமுறை சென்ற 6-ந் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாயிற்று. விடுமுறைமுடிந்து மறுபடி வருகிறபுரட்டாசிமாதம் 1-ந் திகதி புதன்கிழமை கல்லூரி ஆரம்பமாகும்.


### கைலஞ்சம் வாங்கிய உத்தியோகஸ்தர்

எட்டெடக்றர்மார் உட்பட 33 அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் கைலஞ்சம் வாங்கினார்களென்ற குற்றச்சாட்டின் பேரிலே கைலஞ்சஒழிப்புச் சட்டத்தின்கீழ் விசாரணைசெய்யப்படவிருக்கின்றார்கள். இவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளை அற்றோர்ணி ஜெனறல் தயார்செய்திருக்கின்றார். கைலஞ்ச ஒழிப்புப் பொலிஸ்பகுதியினரால் தொடரப்பட்ட முதலாவதுவழக்கிலே புறக்கோட்டையிலுள்ள ஓர்வர்த்தக ஸ்தாபனத்தைச்சேர்ந்த விற்பனையாளரான எம். முகம்மது, எம். கே. எம். முகம்மது எனும்இருவர் அரசாங்க கைத்தொழிற்பகுதியைச்சேர்ந்த எம். பி. பெர்னாண்டோ எனும் கிளாக்குஒருவருக்கு 150ரூபா கைலஞ்சம் அளித்ததில் குற்றவாளிகளாகிச் சென்றதிங்கட்கிழமை தனித்தனி 5,000 ரூபா அபராதமும், அபராதஞ்செலுத்தத் தவறினால் தனித்தனி 21மாதக் கடூரவழிய சிறைத்தண்டனையும், அத்துடன் மத்தியானம்வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்பட் டிருக்கின்றார்கள்.

### ஆனையிறவுப் பரவைக்கடல்

ஆனையிறவுப் பரவைக்கடலை நல்ல தண்ணீராக்குந்திட்டம் 1956-ம் ஆண்டின் மத்தியிலே பூர்த்தியாகவிருக்கிறது. 1952-ம் ஆண்டின் முடிவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நீர்ப்பாசனவேலை 1956-ம் ஆண்டு பூர்த்தியாகும்போது 16லட்சத்து 20ஆயிரம் ரூபா செலவு பிடிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பூர்த்தியாகுமிடத்து வடமராட்சிப் பரவைக் கடலையடுத்துப் 15,000 ஏக்கருக்குமேல் நீர்ப்பாசன வசதிக்குள்ளாகும். அதனால் வடமராட்சியிலும், ஆனையிறவுப் பரவைக்கடலையடுத்துமுள்ள இடங்களில் காய்கறிச் செய்கைக்குவாய்ப்பான தோட்டநிலங்களும், ஆடுமாடுகள் வளர்ப்பதற்கான மேய்ச்சல்நிலங்களும் கிடைக்கக்கூடியனவாகும். இன்னும் அப்பகுதிகளிலுள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றுதிரப்பதுடன் உவர்நீராக மாறவும் மாட்டாது. இந்தநீர்ப்பாசன திட்டத்தின்படி, ஆனையிறவுக்கடலின் கிழக்கு மேற்கு அந்தங்களில் இரு எல்லைமட்டங்கள் அமைக்கப்படும். அதனால் கனகராயன ஆறுமூலம் வந்துசேரும் மேலதிகமான தண்ணீர் அவற்றின் மூலம் வெளியேற்றப்படும். மேலும் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளின் நீர்ப்பாசனவசதிக்காக ஆனையிறவுக்கடலிலிருந்து இருமைல்நீளமான கால்வாய்ஒன்று வடமராட்சிப் பரவைக் கடல்வரையிலே வெட்டப்படும்.

## பத்தாம் பத்திநாதரின் மரணம்



பத்தாம பத்திநாதர் முதல் உலக மகாயுத்தத்தை முன்னதாக அறிவித்திருந்தார். தமது செல்வாக்கை எல்லா இடங்களிலும் செலுத்தி அந்த யுத்தத்தைத் தடுத்துப் பார்த்தார். அவர் என்ன முயற்சி செய்த போதிலும், சம்பேதுரு, சம்பாவிலு அப்போஸ்தலர்களின் சமாதிபடியில் நெடுநேரஞ் செபத்திற் செலவழித்த போதிலும், யுத்தம் நெருங்கிக் கொண்டே வந்தது.

யுத்தம் தொடங்குமெனப் பாப்பாண்டவர் தீர்க்க தரிசனமாய்க் குறிப்பிட்ட வருடத்தில் அது தொடங்கிற்று. தவணைகள் குறிக்கப்பட்டன. பாரிய சேனைகள் ஆயுதபாணிகளாய்ச் சண்டைக்கு ஆயத்தமாய் நின்றன. ஆஸ்திரிய சக்கிரவர்த்தியான பிரான்சீஸ் யோசெப் மன்னரின் ஸ்தானிகர் உத்தியோக உடையணிந்து பத்தாம் பத்திநாதரைப் பேட்டி காணச் சென்றார். அவருடன்கூட மகிமைப் பதக்கங்கள் அணிந்த உதவியாளரும் யுத்தஉடை அணிந்து வரிசையாய்ச் சென்றனர்.

"பரிசுத்த பிதாவே! ஆஸ்திரிய—ஜேர்மானிய சேனைகளில் ஆயிரக்கணக்கான கிறீஸ்தவர்கள் அணிவகுத்துச் செல்ல விருக்கின்றனர். ஆஸ்திரியதேச இராசமார்த்தாண்டர் போரில் முனைந்து நிற்கும் தமது சேனைகளை ஆசீர்வதிக்கும்படி பரிசுத்தபிதாவை வேண்டுகிறார்" என்றார் ஸ்தானிகர்.

பத்தாம் பத்திநாதர் தமது ஆசனத்தைப் பிடித்துக் கொண்டார். கைகள் நடுங்கின. கணகள் சிவந்தன. முகம் சிலிர்த்தது. "சமாதானத்தை ஆசீர்வதிக்கிறோம்; ஆனால், யுத்தத்தை அல்ல" என்றார்.

இப்படியே விடையளித்து அவர்களை அனுப்பி வைத்தார். சில மாதங்கள் சென்றதும் பாப்பாண்டவர் மரணித்தார். தமது சனங்களுக்காக ஒப்புக்கொடுத்த இருதயத்தைக் கவலையும், தீமையும் நொருக்கி விட்டன.

### புகையிலை ஒப்பந்தம்

இந்தியாவும், இலங்கையும் புகையிலை ஏற்றுமதிசம்பந்தமாகச் சென்ற வருடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் கைவிடுவதா, இல்லையா என்பதுபற்றி உணவு—கமத்தொழில் மந்திரி காரியாலயம் ஆலோசனைசெய்து வருகின்றது இந்தஒப்பந்தப்படி 1957-ம் ஆண்டு வரையிலே வருடந்தோறும் 2,500 [illegible] யிலையை [illegible] செய்ய இந்திய அரசாங்கம் உடன்பட்டது. ஆனால், இந்தஒப்பந்தத்திலே ஒப்புக்கொள்ளப்பட்டபடி, யாழ்ப்பாணப்புகையிலை இந்தியாவுக்குப் போவதாயில்லையென்று புகையிலை செய்கை பண்ணுவோரும், ஏற்றுமதியாளரும் முறையிடுவதாகத் தெரியவருகிறது.

### பெரியமடுக்குடியேற்றத்திட்டம்

பெரியமடுவிலே 700 ஏக்கர் விஸ்தாரமான காணியைக் கமச்செய்கைக்குள்ளாக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்தக்காணி முழுவதும் 140 துண்டுகளாகப்பிரித்து அங்கேகுடியேறும் ஒவ்வோர் குடும்பத்துக்கும் வழங்கப்படும். அப்பகுதியில் வேறும் 300 ஏக்கர் நிலத்தை அவ்வாறு கமச்செய்கைக்கு கொண்டுவருதற்கான பரிசோதனைகள் நடைபெறுகின்றன. அங்கு கொண்டுபோய்க் குடியேற்றப்படும் கமக்காரருக்குச் சிறந்த வீட்டுவசதியும், பிறவசதிகளும் அளிக்கப்படவிருக்கின்றன. இரண்டுவருட காலத்துள் [illegible] பூர்த்திசெய்யப்படவிருக்[illegible]

### நான்காவதுஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணச் சிறைச்சாலைக் கத்தோலிக்க உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின நான்காவது ஆண்டு நிறைவு விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை வண. எல். ஏ. சிங்கராயா சுவாமியவர்கள் அங்கு நிறைவேற்றிய திவ்விய பூசையுடன் ஆரம்பமாயிற்று. அதிலே சிறைச்சாலைக் கத்தோலிக்க உத்தியோகஸ்தர்களும், பார்வையாளர்களும், மறியற்காரர் அநேகரும் திவ்வியநனமை பெற்றார்கள். விழாவின் போது மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்கள் பேசியபோது, மறியற்காரரின் வாழ்க்கையைத் திருத்தத்தக்கதாகச் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் அவர்கள்மீது கருணைவைத்துச் சகோதரபான்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அவர்களின் சேமலாபங்களைப்பற்றியும், குடும்பங்களைப்பற்றியும், அவர்களின் வருங்காலம்பற்றியும் விசாரித்து, அவர்கள் விடுதலையானதும் சமூகத்தின் எந்தஸ்தானத்திலே அவர்கள் இருக்க வேண்டும் என்பதுபற்றியும் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் உபதேசஞ் செய்ய வேண்டுமென்றும் கூறினார். சங்கதலைவர் திரு. எஸ். ஏ. சந்தியாகோ அவர்கள் மேற்றிராணியாண்டவரை வரவேற்றார். சங்ககாரியதரிசி திரு. வி. டி. என். யோசெவ் அவர்கள் வருடாந்த அறிக்கையை வாசித்தார்.

### ஐந்துபிள்ளைகளில் ஒன்று

இற்றைக்கு இருபதுவருடங்களின் முன் கனடாதேச காலண்டர்எனுமிடத்திலே ஒரேபிரசவத்தில்பிறந்து உலகப்பிரசித்திபெற்ற ஐந்துபெண்பிள்ளைகளில் எமிலி டையோன்னே எனும் பெண்மணி அங்கு குவெபெக்கைச் சேர்ந்த சென் ஆகதே எனுமிடத்தில் சென்ற 6-ந் திகதி வெள்ளிக்கிழமை காலஞ்சென்று விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

### உணவுத்தலைவரின் நன்மதி

சமீபத்தில் நடந்தேறிய வடமாகாணக் கூட்டுறவாளர்களின் பதினேழாவது வருடாந்தமகாநாட்டிலே உணவு உற்பத்தித் தலைவரான திரு. ஆர். இராசேந்திரம் அவர்கள் பேசியபோது: "அரசாங்கம் அநேகநீர்ப்பாசன—குடியேற்றத்திட்டங்களைத் தொடக்கிவைத்திருக்கிறது; கல்லோயா, அல்லை, கந்தளாய்ப்பகுதிகளில் என்ன நடைபெறுகிறதென்பதைக கமக்காரர் போய்ப் பார்க்கவேண்டும்; அப்பகுதிகளிற் போய்க்குடியேற அவர்கள் முன்வரவேண்டும்; பரந்தன், கிளிநொச்சிமுதலாமிடங்களில் காணிகள்கிடைக்கக் கூடியதாயிருந்தபோது, பாராகண்டிதமாக இருந்ததுபோல இப்போதும் இருக்கக்கூடாது; யாழ்ப்பாணக் கமக்காரர் அரசாங்கம் அளித்துவரும் உதவிகளைப் பயன்படுத்திக்கொள்ள இச்சந்தர்ப்பத்தைக் கைவிடப் படாது; உணவுவிஷயமாய் நாட்டின்சுயதேவையைப் பூர்த்திசெய்வதிலேயே அரசாங்கம் இன்று தன்முழுக்கவனத்தையும் செலுத்திவருகிறது; இந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்யக் கமக்காரர் தங்கள் முழுச்சக்தியையும் இதிலே செலுத்தவேண்டும்" எனக் கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுடைய குரல்

ஆவணிமாதத்தில் ஒருநாள், காலை மணி 6-30. அனெற் இன்னும்படுத்திருந்தாள். எழும்ப அவளுக்கு மனமில்லை. உடனேஎழுந்தால் ஏழேகால் மணிப் பூசைக்குச்செல்லலாம். முகங் கழுவி உடையணிய அரைமணிநேரம். கோவிலுக்கு நடக்கப் பத்துநிமிஷம். எனினும் அதிகாலையில் எழும்புவதென்றால் அவளுக்குப்பிடிக்கவில்லை. தேவதாயாரின் பரலோகஆரோபணத் திருநாளுக்குமுந்திய நவநாட்களிலே பூசைகாணுதிருக்கவும் அவளுக்கு மனம் வரவில்லை. அமைதியின்றிப் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். உள்ளத்தில் பெரும்போர் நடந்தது. உடனேஎழுந்து பூசைக்குப்போவதா? அல்லது படுத்திருப்பதா? நவநாள் காலத்திலும், திருநாளுக்குப்பின்வரும் எட்டுத்தினங்களிலும் பூசைக்குப் போவதாக அனெற் சற்றுப்பின் தீர்மானித்தாள். பரலோகஅன்னைக்காக இவ்வளவாகிலும் தியாகஞ்செய்ய வேண்டாமா?

நேரத்துடன் கோவிலையடைந்தாள். அன்று பக்கப்பீடத்திலும பூசைநடந்தது. நீண்டதாடியுடைய ஓர்குருவானவர் திவ்வியபூசை நிறைவேற்றினர். பிறெடெறிக் அதற்கு உதவிசெய்தான். அவன் அனெற்றின் அண்ணன். வயது 19. அவளைவிட இரண்டுவயது மூத்தவன். பிறெடெறிக்கைப்போன்ற ஓர் அண்ணன் கிடைப்பது அரிதென்று அனெற் அடிக்கடிகூறுவாள். அவள் கூறியது உண்மையே.

இருபூசைகளும் முடிந்தபின் அண்ணனும்தங்கையும் கோவிலுக்கு வெளியே சந்தித்தனர். "அனெற்! நீ இன்று காலையிலேயே எழுந்து பூசைக்கு வந்துவிட்டாயே; தூக்கத்தைவிட்டு வருவதென்றால் உனக்குச் சிரமமாயிருக்குமே; பெரும்பரித்தியாகம்செய்தே நீ இங்கு வந்திருக்கிறாய்; இன்று உன்னிடம் நான்ஒரு இரகசியம் சொல்லப்போகிறேன்; நீ வருந்தக்கூடாது; பிறருக்குத் தெரிவிக்குமுன் அதைஉன்னிடம் சொல்ல ஆசிக்கிறேன்" என்று பிறெடெறிக் மொழிந்தான். இதைக் கேட்டதே அனெற் சிந்திக்கத்தொடங்கினாள். அண்ணன் சொல்லக்கூடிய இரகசியம் அப்படிஎன்ன இருக்கிறது? ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டதோ? என்று நினைத்தாள்.

"அனெற்! நான் தூரநாடுகளுக்குப்போய்த் தமதுதிராட்சத்தோட்டத்தில் உழைக்கும்படி கடவுள் என்னை அழைக்கிறார்" என்று பிறெடெறிக் கூறியதும் அனெற்திகைத்தாள். தனக்குக் கடவுள் ஒருபாரச்சிலுவையை அனுப்பப்போவதாக அவள் உணர்ந்தாள். இதுதவிர வேறெந்தச்சிலுவையையும் அவள்ஏற்கத்தயார். எனினும்அவள் தேவசித்தத்துக்குப் பணிந்துநடப்பவள், தனது உள்ளத்தில் எழுந்தஉணர்ச்சிகளை வெளிக்காட்டாது அடக்கிக்கொண்டு: "அண்ணு! கடவுளுடையகுரலுக்கு நீ கட்டாயம் செவிகொடுப்பாய்; இது எனக்குத் தெரியும்" என்று அமைதியாகமொழிந்தாள். வேறொன்றும்பேச அவளால் முடியவில்லை. தனது கண்ணீரையும், மனத்துயரத்தையும் கடவுளிடம் ஒப்படைத்தாள்.

ஹெலன் என்னும் பெண்மணி அடுத்தவீட்டில் வசித்துவருகிறவள். அண்ணனும் தங்கையும் அன்றுதினம் ஒன்றாகத்திரும்புவதை அவள்கவனித்தாள். வழக்கமாகப் படுக்கையை விட்டுப் பிந்திஎழுந்திருக்கிற அனெற் அன்று அதிகாலையில் வெளியேசென்று திரும்புவதைக்கண்டு அவள் அதிசயித்தாள். அனெற்றுக்கு வயது 17. ஹெலனுக்கு 23. என்றாலும் இருவரும் இணைபிரியாச் சிநேகிதிகள். ஹெலன் அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்தவள். அனெற்றின் கனவெல்லாம் எப்படியாவது ஹெலனைக் கத்தோலிக்கமறையில் சேரச்செய்ய வேண்டும் என்பதே. அதற்காகஅவள் உருக்கமாகச் செபித்துவருவாள். அடிக்கடி திவ்வியநன்மைபெற்று ஒப்புக்கொடுப்பாள். மாதாசுரூபத்துக்கு முன் மெழுகுவர்த்திகள் எரிப்பாள்.

ஒவ்வொருநாளும் அதிகாலையிலே அனெற்எழுந்துகோவிலுக்குச்சென்று திரும்புவதை ஹெலன் கவனித்ததும் அவளுக்குண்டானஆச்சரியம் அதிகரிக்கலாயிற்று. அதன்காரணம் அவளுக்குவிளங்கவில்லை. அதைஉடனே அறியத் தீர்மானித்தாள். மறுநாள் காலை அனெற்கோவிலிலிருந்து திரும்புகையில் அவளைக் ஹெலன் அழைத்து: "என்ன அனெற், என்றுமில்லாத நூதனமாயிருக்கிறது; இவ்வளவு அதிகாலையிலே நீஎழும்பக் காரணம் என்ன?" என்றாள். "என்னுடன் வீட்டுக்குவா, எல்லாவற்றையும் தெரிவிக்கிறேன்" என்று அனெற்அழைத்தாள். இருவரும்சென்று ஆசனங்களில்அமர்ந்தார்கள்.

வேதவிஷயங்களைப்பற்றித் தர்க்கிக்க அனெற் விரும்பியவளல்ல. அதற்குப் பலகாரணங்கள்உண்டு. எனினும் இப்பொழுது ஹெலனே விஷயங்களை அறிய விரும்புகிறாள். இந்தஆசை அவளைக் கத்தோலிக்கமறையிற்சேர்க்க ஒருசாதனமாய் இருக்கலாம். இதை நினைக்கவே அவள்மனதில் ஒருகுதூகலம்பிறந்தது. இதுவரை அவள் தனதுவேதத்தைப்பற்றிக் ஹெலனிடம் ஒன்றும்பேசியதேயில்லை. ஆனால், ஒரு நல்லசந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே என உணர்ந்தஅனெற்: "ஆவணி மாதம் பதினைந்தாம்நாளன்று தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமானதிருநாளை நாங்கள் கொண்டாடுகிறோம்; அதற்குமுஸ்திப்பாக ஒன்பதுநாள்விழா நடைபெறுகிறது; இந்த ஒன்பதுநாட்களிலும், திருநாளுக்குப் பிந்திய எட்டுநாட்களிலும் திவ்விய பூசைகண்டு மாதாவுக்குத் தோத்திரமாக ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்; அதிகாலையிலே எழும்புவதென்றால் வெகுகடினமாயிருக்கிறதுதான்; ஆனால், தேவதாயாருக்காக இதைநான் பொருட்படுத்தாமல் எழுந்து கோவிலுக்குப் போய்வருகிறேன்" என்றாள். தான்சொல்வதற்குக் ஹெலன் விருப்பத்துடன் செவிகொடுப்பதைக் கவனித்த அனெற் தனது திருவேதத்தைப்பற்றி அநேககாரியங்களை எடுத்துரைத்தாள். அவள்பேசிமுடிந்ததும் ஹெலன் அவளைப்பார்த்து: "அனெற்! ஒவ்வொருநாளும் பூசைகாணப்போகக் கட்டாயமில்லை என்றாலும், இளைப்பாற்றிதரும் காலைத்தூக்கத்தைப் பரித்தியாகம் செய்வதற்கான துணிவைத்தரும் உன்வேதம் அதிசயத்துக்குரியதே; நீ சொன்னவைகள் என்னைச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன; உன்வேதத்தைப்பற்றி இன்னும்அதிகமாய் நீ எனக்குச் சொல்லவேண்டும்" என்றாள்.

இரண்டுமாதங்களின்பின் பங்குக் கோவிலில் நடந்த ஞானவொடுக்கப் பிரசங்கங்களுக்குக் ஹெலனும் அனெற்றுடன் போய்வந்தாள். பிரசங்கஞ்செய்த குருவானவர் அங்கிளிக்கன் சபையிலிருந்து மனந் திரும்பியவர். தனதுஅண்ணன் பிறெடெறிக் வீட்டையும் நாட்டையும் விட்டுப்போகிறது முதலாய் அனெற்றுக்கு இப்பொழுது அவ்வளவு துயரம் கொடுக்கவில்லை. அவளின்நினைவெல்லாம் ஹெலனின் மீதே சென்றுகொண்டிருந்தது.

ஞானஒடுக்க பிரசங்கங்கள் முடிவடைந்தன. பிரசங்கியாரைக் ஹெலன் பலமுறைசந்தித்துப்பேசினாள். அனெற் கொடுத்த புத்தகங்களையெல்லாம் வாசித்துமுடித்தாள். வேதசத்தியங்களை நன்குபடித்து மூன்று மாதங்களின்பின் ஹெலன் [illegible] பெற்றபோது அனெற்றே அவளுக்கு ஞானத்தாயாய் நின்றாள். அடுத்த வருடம் தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாளன்று அனெற்றின்சந்தோஷம் நிரம்பிவழிந்தது. அன்றுஹெலன் தனதுசிநேகிதியிடம் ஓர்இரகசியத்தை வெளியிட்டாள்: "தேவசெம்மறிப்புருவையானவர் என்னை அழைக்கிறார்; அவர்செல்லுமிடமெல்லாம் அவரைப்பின்செல்லும் கன்னியர்கூட்டத்தில் நானும் சேரப்போகிறேன்; சேர்ந்து என்வாழ்நாளை உன்னைப்போலவே கடவுளுக்காக நானும் செலவழிக்கப்போகிறேன்" என்றாள்.

சில ஆண்டுகளுக்குப்பின் பிறெடெறிக் குருப்பட்டம்பெற்றார். தூரநாட்டில் கடவுளுடைய திருவேதத்தைப் போதித்துவந்த அவருக்கு ஓர்பெரும் ஆறுதல்கிடைத்தது. அதாவது, அவருடையதங்கை அனெற் கன்னியாஸ்திரியாகி [illegible] நாட்டிலேயே [illegible] செய்துவந்ததே.

# சந்தேகம் தீர்ந்தது!

—: செல்வம் :—

அன்று முழுவதும் தன்னுடைய தகப்பனரிடமிருந்து வந்தகடிதத்தைப் பற்றியே தோமஸ் சிந்தனை செய்துகொண்டிருந்தான். படிப்பில் அவனதுமூளை செல்லவில்லை. மீண்டும் அக்கடிதத்தை ஒருமுறை வாசிக்க அவன்மனம் விரும்பியது வாசித்தான்.

"அன்புள்ள தம்பிக்கு!

இவ்வருடம் மடுப்பதியில் நடந்தேறவிருக்கும் ஆவணிமகோற்சவத்திற்கு அம்மாவும் நானும் செல்லவிருக்கின்றோம். நீபிறந்தபோது வைத்தநேர்த்தி ஆண்டுபதினைசென்றும் இன்னும் நிறைவேற்றவில்லை. இம்முறை எப்படியாவது மடுவுக்குப் போகிறதென்று தீர்மானித்துவிட்டேன். ஆதலால் நீயும் தலைமைஆசிரியரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டுவா."

என்று எழுதப்பட்டிருந்தது.

தோமஸ் அப்போது எட்டாம்வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தான். வயதிற் குறைந்தவனுயிருந்தாலும் அறிவில் முதிர்ந்தவனுயிருந்தான். அவன் எதையும் தீரவிசாரித்தறியும் சுபாவமுடையவன். தான் பெயர்கொண்ட அர்ச்சியசிட்டரைப்போலவே அவனும் கண்டுவிசுவசிக்கும் இயல்புடையவன். எதையும் அவன் இலேசில் நம்பிவிடமாட்டான். தக்கஆதாரத்தோடுதான் எந்தச்சத்தியத்தையும் விசுவசிக்க முற்படுவான். அவனுடைய ஆட்சேபங்களுக்குத் தக்கசமாதானம் கூறமுடியாது சிலதடவைகளில் அவனைப் படிப்பிக்கும் ஆசிரியர்களே இடர்ப்படுவதுண்டு.

சில வேதகாரியங்களையிட்டும் அவன் மனதிலே சிலஆட்சேபங்களிருந்தன. அந்தஆட்சேபங்களில் முக்கியஇடம் வகித்தது, யாத்திரைபற்றிய ஆராய்ச்சியாகும். திருத்தலங்கள் என்றுசொல்லிப் பிறவூர்களுக்குத் தேவாலயயாத்திரை செய்கிறவர்களை அவன்பரிகசிப்பதுவழக்கம். அவர்கள் தேவாலயத்தைச்சாட்டி உல்லாசயாத்திரை செய்பவர்கள்என்று அவர்கள்மீது பழிசுமத்திநிற்பான். இதுபற்றிப் பேசுகையில்: "யான்ஒருபோதும் யாத்திரைத் தலங்களுக்குச் செல்லமாட்டேன்; அந்தமூட வழக்கத்துக்கு இடங்கொடுக்கவே மாட்டேன்" எனச் சபதங்கூறிநிற்பான்.

இக்காரணத்தினுல்தான் தகப்பனரின்கடிதம் கிடைத்ததும் அவன்மனது சஞ்சலமடைந்தது.

"நான்பிறப்பதற்கு நேர்த்திவைத்தார்களாம்! யார் இவர்களை நேர்த்திவைக்கச் சொன்னார்கள். யான் ஒருபோதும் மடுப்பதிக்குச் செல்லமாட்டேன்" என்று தன் மனதுக்குள் தானே சொல்லிக்கொண்டான்.

இரவு சாப்பாட்டுக்கு மணிஅடித்தது. அன்றுஅவன் சரியாக உண்ணவில்லை. வழமைபோல மறுகருமங்களையும் முடித்துக்கொண்டு படுக்கைக்குச்சென்றான். யாத்திரைபற்றி அவன் மனத்திரையில் சிந்தனைகள்பல வட்டமிடலாயின.

கடவுள் எங்கும்இருக்கிறார்; நாம் அவரை வழிபாடுசெய்யக் கோயிலுக்குச் செல்லவேண்டுமா? ஆம், கல்வியை எங்கும்கற்கலாம்; ஆனால், பாடசாலையில் நன்குகற்கலாம்; கற்கச் சந்தர்ப்பங்களுண்டு; அதுபோலக் கோயில்சென்று தேவனைவழிபடுதல் மேலானதுதான்; ஆனால், கோயிலில் ஏற்றத்தாழ்ச்சி கற்பிக்கலாமா? சாதாரண கோயிலிலுள்ள கடவுளைக்காட்டிலும் யாத்திரைத்தலங்களில்வீற்றிருக்கின்ற கடவுள் மேலானவரா? அப்படிஇருத்தல் கூடுமா? இக்கேள்விக்கு அவனால் விடைகண்டறிய முடியவில்லை; அங்ஙனமாயின் இந்தயாத்திரைத்தலங்களுக்குச் செல்லும்வழக்கம் எவ்வாறு உண்டானது? எப்போது உண்டானது? அதுவும் எங்கள்சமயத்தில் மாத்திரமா? எந்தச்சமயத்திற்தான் தலயாத்திரைசெல்லும் வழக்கமில்லை? எல்லாமதத்தவர்க்கும் யாத்திரைத் தலங்களிருக்கின்றன; கிறீஸ்துநாதர் பிறப்பதற்குமுன்னும் மக்கள் யாத்திரை செய்தார்கள்என்று சொல்வதற்கு வேதாகமத்தில் சான்றுகள் இருக்கின்றனவே; கடவுள்ஒருவர் உண்டுஎன்று எல்லாமதத்தினரும் பொதுவாக நம்புதல்போல யாத்திரையும் எம்மதத்தவருக்கும் பொதுவான அம்சமாகக் காணப்படுகிறதே! இதுவும் ஒருசம்பிரதாயமோ? அல்லது இதில் ஏதேனும் கருத்து இருக்கக்கூடுமோ? என்றிவ்வாறாக அவன் சிந்திக்கலானான்.

எவ்வாறாயினும் தந்தைக்குத் தனது முடிபை அறிவிக்கவிரும்பினான். "நான் மடுப்பதிக்குவர விருப்பமில்லை" என மறுத்தெழுத அவனுக்குத் தைரியம் வரவில்லை. ஆயினும் வேறுவழியாக விலகுவதற்கு ஓர்உபாயந்தேட விரும்பினான்.

பாடசாலைஅதிபர் கண்டிப்பான பேர்வழி என்பதை அவன் அறிவான். அவரிடம் விடுதலை பெறுவது நிரம்பவும் சிரமமான காரியம். அவர் மகிழ்வோடிருக்கும் சமயம்பார்த்தே சாதாரணமாகப் பள்ளிப்பிள்ளைகள் ஏதாவது உத்தரவு பெறுவது வழக்கம். தோமஸ் இதற்குவிரோதமாக நடக்கலானான். அவர் சிடுசிடுப்பாய் இருக்கும் நேரமாகப் பார்த்துப்போய்த் தனது வேண்டுகோளை விடுத்தான். அவன் ஜெயமடைந்தான்.

"மாதா எங்கள்கோயிலிலும் இருக்கிறா; மடுவுக்குப்போக வேண்டியதில்லை; போய்ப் பாடத்தைப்படி." இதுதான் அவர்கூறிய விடையாகும்.

தோமஸ் தனது மகிழ்ச்சியை வெளிக்குக்காட்டவில்லை. ஆனந்தத்தோடு திரும்பினான். "மாதா எங்கள் கோயிலிலும் இருக்கிறா; மடுவுக்குப்போக வேண்டியதில்லை" என்ற அந்தவார்த்தைகள்தான் அவன்மனதிலே எதிரொலித்துக்கொண்டிருந்தன.

பாடசாலைமணி அடித்தது. பிள்ளைகள் எல்லாரும் பாடசாலைக்குச் சென்றார்கள். அன்று பாடசாலையில் ஒரு காலாட்சேபம் நடப்பதாக இருந்தது. இந்தியாவிலிருந்துவந்த ஒரு பிரபல வித்துவான் தேம்பாவணிக் கதாப்பிரசங்கம் நடாத்தினர்.

தேம்பாவணியில் மிகவும் நயமான ஓர்பகுதியாகவுள்ளது மகவருள்படலம். அன்று பாகவதரும் அதுபற்றித்தான் கதாப்பிரசங்கம் நடத்திக் கொண்டிருந்தார்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## கிறீஸ்து சமயத்தின் மறுமலர்ச்சி

37 வருடகாலம் இடையருது வேதகலாபனை நடத்தப்பட்டும், கோரமான அடக்குமுறை கையாளப்பட்டும், மும்முரமாக நாஸ்திகபிரசாரஞ் செய்யப்பட்டும் கம்யூனிஸ்த ருஷியாவிலே பலம்பொருந்திய கிறீஸ்துவசமுதாயங்கள் — இளைஞர்கள் மத்தியிற்தானும் இருந்துவருகின்றனவென்று மஸ்கோநகரில் பிரசுரமாகும் தினவர்த்தமானியும், அங்கு கம்யூனிஸ்த கட்சியின் அதிகாரபூர்வமான சாதனமுமாகிய "பிரூவ்டா" எனும் பத்திரிகை தனதுகட்டுரைஒன்றில் செய்தி வெளியிட்டிருக்கிறது. கிறீஸ்துசமயத்தை வேரோடறுத்துப் பரிநாசஞ்செய்துவிடுமாறு சகலவகையான பிரயத்தனங்களும் செய்யப்படடுவந்தும் பரக்க அது மறுமலர்ச்சியடைந்து வருகின்றதென்பதற்கான அறிகுறிகள் பிரத்தியட்சமாகக் காணப்படுகின்றன; ஆகவே, அதனை எதிர்த்துப் பலாத்காரமும், விட்டுக்கொடாததுமான இயக்கம் ஒன்றைத் தொடக்கிநடத்தும்படியாய் இந்தக்கட்டுரைமூலம் ருஷியமக்களுக்கும், கம்யூனிஸ்தஸ்தாபனங்களுக்கும் ஓர் அவசியவேண்டுகோளை அப்பத்திரிகை விடுத்திருக்கின்றது. இவ்விதம் கிறீஸ்துசமயம் மறுமலர்ச்சியடையக் காரணம், மந்திரிசபைகளினதும், கம்யூனிஸ்தசங்கங்களினதும், ஆசிரியர்களினதும், கம்யூனிஸ்த கட்சியினதுதன்னும் வேண்டாவெறுப்பான செயலேயென்று அது குற்றம்பாரித்திருக்கிறது.

## சந்தியாகப்பரின் மகோற்சவம்

ஸ்பானிய தேசத்தின் பாதுகாவலரான சந்தியாகப்பரின் திருநாள் இவ்வருடத்திற்போன்று ஓர்ஞாயிற்றுக்கிழமையில் வரும்போதெல்லாம் அங்கு சந்தியாகப்பரின் திருசேத்திரமாக விளங்கும் கொம்பொஸ்தெல்லாநகருக்குஓர்யூபிலிவருடமாகும். யேசுக்கிறீஸ்துநாதர் அதிகம் இணைபிரியா நட்புக்கொண்டிருந்த மூன்று அப்போஸ்தலர்களில் அர்ச். யாகப்பரும் ஒருவராவர். அர்ச். அருளப்பரும், அர்ச். இராயப்பருமே மற்றிரண்டு அப்போஸ்தலர்களுமாவர். அர்ச். யாகப்பர் பாரம்பரியமாக ஸ்பானியதேசத்தின் அப்போஸ்தலராகக் கொண்டாடப்பெற்று வருகின்றார். இவர் ஜெருசலேம்நகரிலே வேதசாட்சியாகமரணித்தபின் அவரின் திருமேனியானது அற்புதவிதமாக ஸ்பானிய தேசத்துக்குக் கொண்டுபோகப் பட்டதாகப் பாரம்பரியம் கூறுகின்றது. பரிசுத்தநாடடிற்கும், ரோமாபுரிக்கும்பிறகு கொம்பொஸ்தெல்லா நகரே கத்தோலிக்க உலகின் மூன்றாவது யாத்திரைத்தலமாகக் கொள்ளப்படுகிறது. கொம்பொஸ்தெல்லாநகர ஆசனக்கோவிலிலே இந்தயூபிலிவருடத்தில் சந்தியாகப்பரின் திருநாளானது சென்ற ஆடிமாதம் 25-ந் தேதியன்று பலநாடுகளையுஞ்சேர்ந்த ஐம்பதினாயிரம்யாத்திரிகர்கள் கூடியிருந்த சமுகத்திலே மிக்க ஆடம்பரமாகக் கொண்டாடப் படலாயிற்று. இந்தயாத்திரிகர்களில் லண்டன் நகர் வெஸ்ற்மினிஸ்றரின் துணைமேற்றிராணியாரான கிறவென் ஆண்டவரது தலைமையில் ஐம்பது ஆங்கில கத்தோலிக்கரும் அடங்கியிருந்தார்கள். இவர்களைத்தவிரக் கொம்பொஸ்தெல்லாநகர் ஆசனக்கோவிலுக்குப் பிரமாண்டமான ஓர் தூபகலசத்துக்கென்று வெள்ளிஉபகரித்தவர்களாய்க் கியூபாதீவிலிருந்து 300 ஸ்பானிய யாத்திரிகர்களும் சமுகமாயிருந்தார்கள். அன்று நிறைவேறிய திருநாட் பெரிய பாடற்பூசைக்கு மூன்று கருதினல்மாரும், 25 பேருக்கு மேற்பட்ட மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரும் பிரசன்னமாயிருந்தார்கள். சந்தியாகப்பருக்கு ஸ்பானியாவின் பாரம்பரியமான பாராட்டுரையை வழங்குவதற்காக அத்தேச அரசாங்கதலைவரான ஜெனறல் பிருங்கோ தமது முழுஅதிகார உடையுடனும் சமுகமளித்து நிகழ்த்திய அன்பான சொற்பொழிவிலே, "சிலநாடுகளில் நடைபெற்றுவருகின்ற பைசாசத்துக்குரிய வேதகலாபனை"யைப்பற்றிக் குறிப்பிடலாயினர்.

## ஸ்தானிகரும் கிழக்கு ஜேர்மனியும்

எர்பேட்நகரிலே சமீபத்தில் நடந்தேறிய அர்ச். பொனிப்பாஸியாரின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்துக்குச் சமுகமளிக்கும்படியாய்ச் சோவியற் ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனிக்கு விஜயஞ் செய்தபோது, தாம்வரவேற்கப்பட்டதிலும் அதிகங்கூடிய பஹேற்சாகத்துடனும், குதூகலத்துடனும் தாம் முன்னொருபோதுமே வரவேற்கப்படவில்லையென்று ஜேர்மனியிலே பாப்பரசரின் ஸ்தானிகராய் இருந்துவருகிறவரான முவெஞ்ச் அதிமேற்றிராணியார் ரோமாபுரியில் தெரிவித்திருக்கின்றார். "திருச்சபையின்மட்டிலும், பரிசுத்தபிதாவின்மட்டிலும் கிழக்கு ஜேர்மனிய கத்தோலிக்கமக்கள் கொண்டுள்ள விசுவாசபிரமாணிக்கமும், பக்திபற்றுதலும் கொண்டாட்டம்நிகழ்ந்த எல்லா நாட்களிலுமே பிரத்தியட்சமாகக் காணப்பட்டன; தங்கள்மத்தியில் பரிசுத்தபிதாவின் பிரதிநிதியைக் கொண்டிருந்தமை அவர்களுக்குச்சொல்லமுடியாத அகமகிழ்ச்சியைக் கொண்டுவரலாயிற்று; சோவியற்ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனிக்கு நாம்செய்த இந்த முதற்பிரயாணத்தில் எத்தகையகஷ்டங்களும் நமக்குஏற்படவில்லை; அங்கே நாம் அநேக கத்தோலிக்க ஸ்தாபனங்களைப் பார்வையிட்டோம்" என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## மரியாயின் வருட தபால் முத்திரைகள்

ஜேர்மனியிலே ஸார்நாட்டின் தபால்நிர்வாக பகுதியானது மரியாயின்வருட ஞாபகார்த்தமாகச் சென்றஆடிமாதம் மூன்று புதியஇனத் தபால்முத்திரைகளைப் பாவனைக்கு வழங்கியிருக்கிறது. இவைகள்மூன்றும் தேவதாயாரினதும், திருக்குழந்தை யேசுவினதும் கீர்த்திபெற்ற மூன்று சித்திரப்படங்களின் பிரதிரூபங்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றிலே ஐந்து பிராங்முத்திரை ஹான்ஸ் ஹொல்பீன்எனும் பேரான சைத்திரியரால் வரையப்பெற்ற "மேயர்மியர்" மாதாபடத்தினதும், பத்துப்பிராங் முத்திரை இறப்பாயேல்எனும் பேரான சைத்திரியரால் வரையப்பெற்று வத்திக்கானிலே சிஸ்ரைன்சிற்றாலயத்தில் இருந்துவருகின்ற மாதாபடத்தினதும், 15பிராங்முத்திரை தூறர்எனும் பேரான சைத்திரியரால் வரையப்பெற்ற பேரான மாதாபடத்தினதும்பிரதிமைகளைக் கொண்டிருக்கின்றன.

## முன்னாள் பொலிஸ்காரர்

தென்னாபிரிக்காவிலே திரான்ஸ்வால்நாட்டில் ஓர் தொமினிக்கன் சபைக் குரவரான வண. நிக்கலாஸ் ஹம்பிறேயிஸ் சுவாமியார் "போதக தலைவர்" எனும் மகிமைப்பட்டம் வழங்கப்பெற்றிருக்கிறார். தொமினிக்கன்சபை அருளக்கூடிய ஓர் உயரிய பட்டம்இதுவாகும். வண. ஹம்பிறேயிஸ் சுவாமியார் ஓர்காலம் இந்தியாவில்ஓர்பொலிஸ்காரராய் இருந்தவர். முதலாவது உலகயுத்தத்தில் ரோயல் ஆகாயப்படையிற்சேர்ந்து யுத்தசேவை செய்தவர். 1920ம் ஆண்டு புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிய இவர் 1927-ம் ஆண்டு தொமினிக்கன் சபையிற்சேர்ந்து தென்னாபிரிக்காவில் குருப்பட்டம் பெற்றார்.

## வியெற்நாமின் பிரதமர்

இந்தோசீனாவிலே வியெற்நாமின் புதியபிரதமராக நியமனஞ் செய்யப் பெற்றிருப்பவரான திரு. நிகோ டின் டியெம் அவர்கள் ஓர்சிறந்த கத்தோலிக்கராவர் இவர் மாண்டறிய வகுப்பைச்சேர்ந்த ஓர்புராதன கத்தோலிக்ககுடும்பத்தில் பிறந்தவர். அப்போது இவர் ஓர்சுதந்திரநாடாயிருந்த அன்னமின் பிரதமராக ஓர்காலம் விளங்கியிருந்தவர். சென்றயுத்தத்திலே யப்பானியர் வெளியேற்றப்பட்டபோது வியெற்நாமின் மந்திரிசபையில் சிலகாலம் உள்நாட்டு மந்திரியாராய் இருந்தவர். இவருடைய சகோதரர்களில்ஒருவர் வின் - லோங்கின் விக்கார்அப்போஸ்தலிக்குவான பீற்றர் டின்துக் மேற்றிராணியார். மற்றோர்சகோதரர் கம்யூனிஸ்தர்களால் கொலைசெய்யப்பட்டார்.

## மந்திரியாரும் மிஷனரிமாரும்

பிறதேச மிஷனரிமார்களை இந்தியாவினின்று வெளியேற்ற வேண்டுமெனக் கிறீஸ்துவ கோவில்களின் முன்பாகநின்று ஆர்ப்பாட்டஞ்செய்யும் இந்து மகாசபையினரின் நடத்தையை மந்திரியார் ஜக்ஜீவன்ராம்அவர்கள் கண்டித்து: "கல்வி நிலையங்கள் நடத்துவதற்கும், ஏழை மக்களுக்கு வைத்தியஉதவிகள் செய்வதற்கும் கிறீஸ்தவ மிஷனரிமார்கள் அயராமல்உழைக்கிறார்கள்; ஆடு, மாடு, கன்றுகள் குடிக்கத்தயங்கும் தண்ணீரைக்குடித்துவாழும் ஹரிஜனங்கள்—தங்கள்வாழ்நாளில் வைத்தியவசதி எதுவும்பெற வாய்ப்புப்பெறாத ஏழைஹரிஜனங்கள் — கிறீஸ்துவ மிஷனரிமார்களின் அன்புததும்பும் சேவையினால் கவரப்படுவதில் வியப்பு என்ன? கிறீஸ்துசமயத்தைப் பின்பற்றுவதற்கு ஹரிஜனங்களைத்தூண்டும் சூழ்நிலையைச் சீர்திருத்த இவர்கள்முயல்வார்களாக" எனக்கூறியிருக்கின்றார். நாகபுரியிலும், அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பலஆண்டுகளாக உழைத்துவரும் மிஷனரிமார்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்நடத்தும் இந்துமகாசபையினர் அந்த ஏழைமக்களுக்காக இன்றுவரை எந்தச்சேவையும் செய்ததில்லை. தலைமுறை தலைமுறையாக உயர்ந்தசாதிகளின் அடிமைகளாகவாழ்ந்து, இந்தநாட்டின் குடிமக்களுக்குரிய உரிமைகள் எதுவும்பெறாது வறுமையில் ஆழ்ந்துகிடக்கும் ஏழைமக்களைக் கைதூக்கிவிடப் பாடுபடும் மிஷனரிமார்கள்பேரில் அந்தமக்கள் அன்பு காட்டுகிறார்கள். இவ் அன்பு இந்துமகாசபையினருக்குப் பிடிக்கவில்லை.

● திவ்வியஇரட்சகரின் ஐந்துதிருக்காயங்களும் தமதுஉடலிலே அற்புதவிதமாகப் பதியப்பெற்றுள்ள ஓர்இத்தாலியரு"வானவரும், அங்கு சான் ஜியோவான்னி றொட்ரொண்டோ ஆச்சிரமத்தில் வசித்துவருகிறவருமான வண. பியோசுவாமியார் சமீபத்திலே தமது 67-வது பிறந்தபெருநாளைக் கண்டுகளித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதம்

போதுக்கருத்து :— கிறீஸ்துவ விசுவாசிகள் ஆபாசமும், வேதவிரோதமுமான பிரசுரங்களை ஊக்கத்தோடு எதிர்த்துப் போராடும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— லத்தீன் அமெரிக்க மாணவரிடையே வேதபோதக மனப்பான்மை வளர்ந்து செழித்தோங்கும்படியாக மன்றாடிக்கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
ஆவணி மாதம் 12-ந் திகதி


## வண. என். சந்தியாகுச் சுவாமிகளின் தேகவியோகம்

நமது மேற்றிராசனத்திலே அதிககாலங்கண்ட குருப்பிரசாதியாய், பெருந்தியாகியாய், வேத வைராவியாய், சிறந்த ஆன்ம, சரீர வைத்தியராய், பிள்ளைகளின் அரியபிரசங்கியாராய், மூன்று பிரியதத்தமந்திரப் பக்தியின் பெரியபிரசாரகராய், பகலும் இரவுமாகப் பாவசங்கீர்த்தனத் தட்டியையே தமது ஆசனமாகக் கொண்டிருந்து அதுகாரணமாக யாழ்ப்பாணத்தின் கூரேதார்ஸ்என்று அறியப்பெற்றவராய், தேவபக்தியில் பழுத்த பழமாய், எம்மத்தியிலே விளங்கியிருந்தவரான வண. என். சந்தியாகுச் சுவாமியவர்கள் கடந்த ஐந்துவாரங்களாக விருத்தாப்பியநோய் கண்டிருந்து சென்ற 9-ந் தேதி திங்கட்கிழமை உருமத்தின்போது மரணத்திரையில் மறைந்தாரென்னும் துயர செய்தியைப் பெரிதும் கவலையுடன் தெரிவிக்கின்றோம். மரிக்கும்போது சுவாமியாருக்கு வயது 85.

வண. நீக்கிலாப்பிள்ளை சந்தியாகுச் சுவாமியவர்கள் வதிரியிலே உயர்வேளாண்மரபிலே உத்தம கத்தோலிக்க குடும்பமொன்றில் 1869-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 1-ந் திகதியன்று பிறந்தார். 1884-ம் ஆண்டு குருமடத்திற் சேர்ந்து அமலோற்பவ மரிய நாயகி பரித்தியாகிகள்சபையில் ஒருவராகி 1897-ம் ஆண்டு மாசி மாதம் 14-ந் திகதியன்று எமது மேற்றிராசனத்தில் இருபெரிய கல்விமான்களாய் விளங்கியிருந்த வண. பி. எம். பிரான்சீஸ், வண. கே. செபஸ்ரியன் எனும் இருகுரவரோடும் ஏககாலத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். குருப்பட்டம் பெற்றபின் சுவாமியவர்கள் நாரன்ட்டான், பறப்பாங்கண்டல், ஆனைக்கோட்டை, உயிலங்குளம், முருங்கன், மயிலிட்டி, அச்சுவேலி, பாண்டியன் தாழ்வு ஆதியாம் விசாரணைப்பங்குகளிலே மிகுந்த ஆர்வத்துடனும், பெருந்தியாகத்துடனும் திருத்தொண்டாற்றிவந்த சுமார் அரைநூற்றாண்டு காலத்திலும் ஆற்றியுள்ள அருஞ்சேவைகளை எடுத்துக்கூறும்தரமன்று. அவர் போனவிடமெல்லாம் புதிய கோவில்களைக் கட்டியெழுப்பியும், பழையகோவில்களைப் பழுதுபார்த்துப் புதுக்குவித்தும், பிரிவினைகளை ஒழித்தும், கெட்டுப்போன மக்களை ஆயிரமாயிரமாக நல்வழிப்படுத்தியும், பிள்ளைகளுக்குக் கருத்தாக ஞானோபதேசம் படிப்பித்தும், ஆத்துமவைத்தியராக மாத்திரமல்ல, ஆனால், நோய்வாய்ப்பட்டவர்களின் சரீரவைத்தியராகவுமிருந்து அவர்களைக் குணப்படுத்தியுமவந்தமையால் எவ்வெவராலுமே அவர் ஓர் நல்ல பிதாவைப்போன்று வெகுவாக நேசித்துப் பாராட்டப்பெற்றுவந்தார். பெரியடக்டர்மாரும், பேரான ஆயுர்வேத வைத்தியரும் குணப்படுத்த முடியாதிருந்த நோயாளரைச் சுவாமியவர்கள் தமது வைத்திய முறையால் சிலவேளைகளில் பிரமிக்கத்தக்கவிதமாய்க் குணப்படுத்தியதை நாம் அறிவோம்.

நமது பாலியப்பிராயத்திலே, நமக்குப் பகுத்தறிவுண்டான காலத்திலே சுவாமியாரென்று நாம்கண்ட முதற்குருப்பிரசாதி வண. சந்தியாகுச் சுவாமியவர்களே. அந்நாளிலே சிலபுதிய கத்தோலிக்க குடும்பங்களையும், மண்சுவரைக்கொண்ட ஓர் கொட்டிற் கோவிலையுமே கொண்டிருந்த அந்தப் புது வேதக்கிராமத்திலே சுவாமியவர்கள் ஆற்றிவந்த போற்றற்பால ஆன்ம, சரீரநன்மைகள் காரணமாக அவர் எத்துணை பிரஸ்தாபம் பெற்றிருந்தாரெனில், அங்குள்ள பிறசமய மக்களிடையேதானும் அவர் நாமம் இன்றைக்குமே மறக்கப்படாததொன்றாய் இருந்துவருகின்றது. அக்கிராமம் தற்சமையம் வேதச்செழிப்புற்று விளங்குகின்றதெனில், அதற்கெல்லாம் அடியிட்டபெருமை சுவாமிகளுக்கே உரியதாகும். பறப்பாங்கண்டலிலே ஐம்பது ஆண்டுகட்குமேல் திருச்சபையை விட்டுப் பிரிந்துபோயிருந்த நூற்றுக்கணக்கான மக்களையெல்லாம் மனந்திருப்பித் திரும்பவும் சத்தியமறையில் சேர்த்த பெருமையும் சுவாமிகளுக்கே உரியதாகும். மேலும் பாவசங்கீர்த்தனத்தட்டியையே தமது ஆசனமாக — அருந்தவத்தால் உடல்மெலிந்த தமது சிம்மாசனமாகக்கொண்டு தம்மைநாடிவருகிறவரிடமெல்லாம் அலுப்பின்றிச் சலிப்பின்றி நெடுநேரமாகப் பாவசங்கீர்த்தனம் கேட்டுவந்தாராகலின் அவரையும் இதுவிஷயமாய்க் கூரேதார்ஸ் எனும் பரிசுத்தகுருவானவருடன் பலமுறைகளிலும் பலரும் ஒப்பிட்டுவந்தது ஆச்சரியமன்று.

அன்றும்நாம் சுவாமிகளிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்தோம். அதிலே அவர்சொன்ன — மிக அழுத்தி வற்புறுத்திச்சொன்ன இரு புத்திபோதனைகள் இன்னுமே நமதுசெவிகளில் இப்போதே சொல்வதுபோல் தொனித்துக்கொண்டிருக்கின்றன. "பிள்ளாய், தினமும் காலைமாலை மூன்று பிரியதத்தமந்திரம் சொல்லமறவாதே; கடந்த 63வருடங்களாக நான் அதைச்சொல்லி வருகிறேன்; இன்னும் நாம் இரட்சணிய மடையத் தேவமாதா அதிகம் இலகுவான ஓர் வழியைப் பாத்திமாவில அறிவித்திருக்கின்றா; அதன்படி, ஐந்துமுதற்சனிக்கிழமைப் பத்தியை அனுசரித்துவாடு" என்று திருப்பத்திரும்ப அழுத்தமாகச் சொல்லி ஆசீர்வாதம் அருளினார். இதற்குமுன் ஒருநாளுமே இல்லாதவிதமாகச் சுவாமியவர்கள் இப்படிக்கூறியது நமக்கு விளங்கமுடியாத ஓர் புதிராய் இருந்தது. இரண்டொருதினங்களாக அதே சிந்தனையாகவே இருந்தது. சிலவேளை இதுதான் நாம் அவரிடம்செய்த கடைசிப் பாவசங்கீர்த்தனமாய் இருக்குமோவென்றுமுதலாய் எண்ணிவிட்டோம். ஆம், அதுதான் நாம் அவரிடஞ்செய்த கடைசிப் பாவசங்கீர்த்தனமாயிற்று. இது நிகழ்ந்து ஐந்து தினங்கள் தானும் செல்லவில்லை. தமது மிகநீண்ட சீவிய காலத்திலே நோயென்றுசொல்லிப் பாயிற்படுக்காதவர் — தலையிடியென்று சொல்லித் தலையணையிற்சரியாதவர் நோய்கண்டார். பாயும்படுக்கையுமாக வீழ்ந்தார். அதுவே அவரின் அந்தியநோயாயிற்று. அவரின் கடைசிப் படுக்கையாயிற்று. ஐந்துவாரங்களாக ஓர் குழந்தைபிள்ளைபோலப் படுக்கையிலே காட்சியளித்தார். கடைசியாக, எமது நாட்டின் கூரேதார்ஸ்என்னும் குருமுனிவரென நாம் மதித்துச்சங்கித்து வணங்கிவந்த சுவாமியவர்கள் அர்ச். கூரேதார்ஸ் (வியான்னி அருளப்பர்) என்று திருச்சபையில் பிரசித்திபெற்றிருக்கும் அந்தப்பெரிய ஆத்தும குரவரின் திருநாளாகிய சென்ற 9-ந் தேதி திங்கட்கிழமை பகல்ஒருமணியளவில் தமது சகோதரகுருப்பிரசாதிகள்புடைசூழ்ந்து செபங்கள் செய்துநிற்க மரணத்திரையில் மறைந்தார். அந்தோ! நம்மை விட்டுப்பிரிந்தார். இந்த அமங்கலசெய்தியை ஆசனக்கோவிலின் பாரியகண்டாமணிகள் இரண்டும் துக்கநாதஞ்செய்து அறிவிக்கவே, நாம் ஆறுத்துயருற்றோம். கண்கலங்கிக் கண்ணீர் உகுத்தோம். சுவாமிகளுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளுமென்று இருகரங்குவித்து இறைவனை இரந்து மன்றாடினோம்.

சுவாமியவர்கள் மரணித்தபின் அவர் திருமேனியானது குருவஸ்திரங்கள் அணியப்பெற்று, மேற்றிராணியாண்டவரின் சின்னக்கோவிலிலே வளர்ததப்பட்டிருக்க, குருமாரும், கன்னியாஸ்திரீமாரும், விசுவாசிகளும் திரள்திரளாகச் சென்று சந்தித்து அவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடியவண்ணமிருந்தார்கள். மறுநாட்காலை திருமேனியானது ஆசனக்கோவில் கொண்டு சென்று அங்கே பூச்சியமாக வைக்கப்பெற்றதும் சுவாமிகளின் மருகரான வண. பி. நிக்கலஸ் சுவாமியவர்கள் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசைநிறைவேற்றினர். சாயந்தரம் மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவரும், குருமார்நாற்பதின்மரும், கன்னியாஸ்திரீமார்பலரும், சுவாமியவர்களின் சுற்றத்தவர்களும், மற்றும் அவரிடம் வைதிக, லௌகிக நன்மைகள்பெற்றுள்ள ஞானமக்களுமாகப் பெருந்திரளான பேர்கள் சமுகமாக, வண. பி. நிக்கலஸ்சுவாமியார், வதிரி-கரவெட்டிக் கட்டளைக்குரவர் வண. பி. ஈ. அல்பிறெட சுவாமியார் எனும் குரவர்கள் இருவரையும் துணையாகக்கொண்டு மேற்றிராசனபரிபாலனரான மகாவண. எல். லெகுத்தூர் சுவாமியவர்கள அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றினர். அதன்மேல் சுவாமியவர்களின் திருமேனியானது பெரியஊர்வலமாகச சேமக்காலை கொண்டுசென்று மேற்றிராசன பரிபாலனரான சுவாமியவர்கள் கடைசி ஆசீர்வாதம கூறிநிற்க, எல்லோருமே பெருமூச்செறிந்து இரங்கிநிற்க, பெரிதுஞ் சோபசந்தாப மத்தியில் பூமிதானஞ் செய்யப்படலாயிற்று.

**R. I. P.**



## சதாசகாயமாதா கோணம்

## மோட்ச ஆரோபணம்

தேவமாதா ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்என்பது வேதசத்தியம். இந்தஉண்மையைப் பரிசுத்த மாதாவாம் திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிறது. விசுவாசிகள் அதைப் பணிவாகஏற்று அத்திருநாளை ஆவணித்திங்கள் 15-ம் நாள் ஆடம்பரமாகக் கொண்டாடுகிறார்கள்

தேவதாய் தமது திவ்வியகுமாரனைப் போல மரித்தா. ஏன்? நம்முடைய இரட்சணியத்துக்காக. இதில் சந்தேகமில்லை. அவவுடையதூய, பரிசுத்த உடலமோ அழிவுக்குஉட்பட ஆண்டவர் விட்டுவிடவில்லை. பாவநிழல்தானும் அணுகாத பரிசுத்தமேனி பதங்கெட நியாயமுமில்லை. தேவதாயாரின் மோட்சஆரோபணத்தை யொட்டிச் சந்தேகமெதுவும் இருக்கமுடியாது.

தேவமாதா பூலோகத்தில் இருந்த காலத்திலே தம்மைச் சுற்றியுள்ளோருக்கு எந்நேரமும் உதவிசெய்வதில் மிகவுங் கண்ணுங்கருத்துமாய் இருந்து வந்தாளென்பது பாரம்பரியம். பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் அவவுடைய வல்லமைக்கு மட்டில்லைஎன்றே சொல்லலாம். தம்முடைய உதவிசகாயத்தை இரந்துமன்றாடுகிறவர்களுக்கு ஒத்தாசைபுரிவதும், அவர்களை நேசிப்பதும் அவவுடைய ஒரேயொரு ஆனந்தம்என்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

எங்களுக்கு உதவிபுரிய அவவின் வல்லமை மட்டற்றது. எங்களுக்காகப் பரிந்துபேசத் தேவதாயார் விரும்பும்போது, அதற்கு வரம்புகட்டத் தேவன் ஒருபோதும் குறுக்கிடுவதில்லை. தேவதாயார் எங்கள் தாயார். அவவுடைய தாய்க்குரிய இயல்புடன் நாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் தமதுபக்கமாக — தமது திருக்குமாரனை பக்கமாக அண்டிவரவேண்டுமென ஆவலாய் இருக்கிறா. நாம்இவ்வுலகத்தில் மாத்திரமல்ல, மறுஉலகத்திலும் தம்முடனும், தமதுதிருக்குமாரனுடனும் சதாகாலமும் மோட்சதரிசனையடைந்து இன்புற்றிருக்கவேண்டுமென ஒரேகவலையாயிருக்கிறா.

மோட்ச இராச்சியத்தின் புனித இராக்கினியாய் விளங்கும் தேவதாயார் இந்தக்கண்ணீர்க்கணவாயில் இருந்து அங்கலாய்த்துத் தேம்பிஅழும் மனுக்குலத்துக்கும் இராக்கினியாகவிளங்குகிறா. பாவச்சகதியில் சிக்குண்டு, நரகபாதையில் சென்றுகொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய ஆத்துமங்களில் அவ தமதுஇரக்கக்கண்களைத் திருப்புகிறா. எவ்வித அபாத்திரவான்களாய் இருந்தாலும் அவர்களையும், தமது திருக்குமாரனது பாடுகளின் பேறு அவமபோகாவண்ணம், தம்பக்கம் ஈர்த்தெடுக்க எப்போதும் ஆயத்தமாகஇருக்கிறா. நாம் அவவுடைய புண்ணியங்களை அனுசரித்து, அவவுடையபிள்ளைகளென்று காண்பிக்க எவ்வளவு பிரயாசப்படுகிறோமோ அவவும் தமதுசத்துவம்எல்லாங் கூட்டி நமக்குஉதவிசெய்ய முன்வருவா. உதாரகுணத்தில் நாம் தேவதாயாரை ஒருபோதும் வெல்ல முடியாது.

தேவதாயாரின் மோட்சாரோபணத் திருநாளைக் கொண்டாடும்போது, நாமும் ஒருநாள் மோட்சத்தில் இருக்கவேண்டுமென்ற ஆசையோடு—தம்மையும், தம்முடைய திருச்சுதனையும் முகமுகமாகத் தரிசிக்கவேண்டுமென்ற விருப்போடு தம்பிள்ளைகளைத் தம்மிடம் அவ அழைக்கும்போது, அந்த அழைப்புக்குச் செவிசாய்க்கும் ஆயத்தத்தோடு இவ்வுலகசீவியத்தைச் சீரிய முறையில் நடத்திவரவேண்டும். அப்போது தேவதாயார் நமக்குத்தேவையெனக்காணும் சகல உதவிகளையும் செய்யத் தயங்கமாட்டா.

சகாயமாதாவின் பக்தர்களுக்கு

## ஓர் அறிவிப்பு

சகாயமாதா படத்தைப்பற்றிய விரிவானசரித்திரம் அறியவேண்டுமானால், சகாயமாதாவிடம் சகாயம் பெற்றவர்களின் பெயர், இடம், விபரம் அறிய வேண்டுமானால், சகாயமாதாவின் விரிவானசரித்திரம், அம்மானை, தேவாரம், திரைவிருத்தம், ஸ்தோத்திரப்பாடல்கள், நவநாட்செபங்களான இவைகள் ஒருங்கே அமையப்பெற்ற சகாயமாதா சரித்திரப்புத்தகத்தைத் தருவித்து நீங்களும் வாசித்துச் சகாயமாதாபேரில் பக்தியைப் பெருக்கிச் சகாயங்கள் பெற்று நன்மையடையுங்கள்.

ஆசிரியர், காவலூர் கவிஞர்

ஜி. எம். செல்வராஜ்.

விலை ரூபா :— 1-50

வியாபாரிகளுக்கு விசேஷகமிஷன் உண்டு. தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 1-50 போஸ்றல்ஓடர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்குமிடங்கள் :

573 புளூமெண்டல் றோட்
கொட்டாஞ்சேனை, கொழும்பு.

அல்லது

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

● இந்தியாவிலே பூனாநகரில் டக்றர் ஐ. பைஸ்என்பவர் வளர்க்கும் கோழி ஒன்று சாதாரணகோழிமுட்டையைப் பார்க்கிலும் நாலுமடங்கு பெரிதான ஓர் முட்டையை இட்டிருக்கின்றது. இதன்நிறை ஆறு அவுன்ஸ். இதுதான் உலகில் மிகப்பெரிய கோழிமுட்டையென்று சொல்லப்படுகிறது இந்தக் கோழி இதற்குமுன் ஐந்தரை அவுன்ஸ் நிறையுள்ள முட்டையிட்டிருக்கிறது.

## புனிதவளன் கல்லூரியின் முன்னாள் மாணவர் விழா

சென்ற 7-8-54 சனிக்கிழமை காலை 6 மணிக்குத் திவ்வியபூசையுடன் ஆரம்பமான இவ்விழா அன்று பிற்பகல் 9-30 மணிவரை சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. முந்தக் காலை 8மணிக்கு அனுராதபுர முற்றவெளிமைதானத்தில் முன்னாள்மாணவருக்கும், இந்நாள் மாணவருக்குமிடையே மாச்சாட்டைப்பந்தாட்டம் நடைபெற்றபோது பெருந்திரளானமக்கள் அதைப்பார்த்து ரசித்துநின்றார்கள். உருமத்தின்போது ஆட்டம்நிறுத்தப்பட்டுப் போட்டியிற் பங்குபற்றியவர்களுக்குப் புனிதவளன் கல்லூரி விடுதிசசாலையில் அளிக்கப்பட்ட பகல்விருந்துமுடிந்து மீளவும் ஆட்டம்தொடர்ந்து பிற்பகல் 4 மணிவரை நடைபெற்றது. அதன்மேல் ஓர்உதைபந்தாட்டப் போட்டியும் அங்கு கவர்ச்சிகரமானமுறையில் நடைபெற்றது.

தேநீர்விருந்தின்பின் "டெனிஸ்"பந்தாட்டம் கலலூரிமைதானத்தில் நடைபெற்றது. வயதுமுதிர்ந்தோரும் இப்போட்டிகளில் பங்குபற்றியமை புனிதவளன்கல்லூரியின் புத்துணர்வை மக்கள் உணரச்செய்வதாயிற்று.

இவ்விழாவின் மிகச்சிறந்த அம்சமெனக் குறிப்பிடத்தக்க முன்னாள் மாணவர்சங்ககூட்டம் மாலை 7மணிக்கு ஆரம்பமாயது. அதற்கு இருபிரதிநிதிகளும், பதநீதிபதி ஒருவருமுட்பட இப்பகுதியில் கணிபபுற்றுவிளங்கும் 150 பேருக்குமேற்பட்ட முன்னாள் மாணவர்கள் சமுகமளித்தார்கள். தலைவராகக் கல்லூரிஅதிபர் வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ், B.A.,(Lon.) சுவாமி அவர்களும், கௌரவகாரியதரிசியாக அனுராதபுர உபதபால் அதிகாரி ஏ. பங்கிராஸ்அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கபபெற்றார்கள். பொது நிர்வாகசபைஅங்கத்தவராகக் கலாவீவாபபிரதிநிதி திரு. மஹாதுல்வேவா அவர்களும, மதவாச்சிப்பிரதிநிதி திரு. மைத்திரிபாலா செனநாயக்கா அவர்களும், முதலியார் குணசேகரா அவர்களும உட்படத் தெரிந்தெடுக்கப்பட்ட எழுவருள் தற்போதைய ஆசிரியரும் ஒருவர்என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரதிநிதி மஹாதுல்வேவா அவர்கள் தமது சிற்றுரையின்போது: தாம் மூன்று பாடசாலைகளில் கல்விபயின்றிருந்தும் புனிதவளன் கல்லூரியிற்றான் தமக்கு மிக்கானஅன்பும், ஆர்வமுமுண்டென்றும், தாம இக்கல்லூரியின் முன்னாள் மாணவன் எனபதிலே பெருமைகொள்வதாயும், செயலாற்றும் வன்மைநிறைந்த தற்போதைய கல்லூரித்தலைவரின் ஆதரவில் இந்த முன்னாள்மாணவர்சங்கம் இந்நாட்டுக்கும், தற்போதுள்ள மாணவருக்கும் தொண்டுசெய்யும் ஊக்கமுடையதாய் இன்றுபோலென்றும் திகழுமென்று தாம்உறுதியாக நம்புவதாயுமகூறினார்.

தொடர்ந்து மதவாச்சிப் பிரதிநிதி மைத்திரிபாலா செனநாயக்காஅவர்கள் தமதுபேச்சிலே, கல்லூரித்தலைவரின் பெருமையையும், தகமையையும் பாராட்டியதுடன், பணவளம்குறைந்த விவேகிகளான மாணவர்க்கு உதவுந்திட்டமொன்றையும் பிரேரித்தார். அப்பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேறியது. இன்னும் முதலியார்குணசேகராஅவர்கள், தாம் வயதுமுதிர்ந்தவராயிருந்தும் இக்கல்லூரியின் முன்னாள்மாணவர் என்னும்போது தமது இளமை உணர்ச்சியுடன் இளமையையே அடைந்துகொண்டிருப்பதுபோல் உணர்வதாகக்கூறியபோது சபையில் பலத்தகரகோஷம் எழுந்தது. தொடர்ந்து இன்னும்பலபெரியார்கள் சிற்றுரைகள் நிகழ்த்தினார்கள்.

மாலை 8 மணிக்கு யாவர்க்கும் இராப்போசனம் அளிக்கப்பட்டது. பெரியார்கள்பலர் தாங்கள்...

## முகமாலை
## அர்ச். பிலோமினம்மாள்பேரில் பஞ்சகம்

வெண்பா

1

நங்கூரம் தாங்கியொரு நாரியம்பு வைத்திருப்பாள்
எங்கூக் குரலுக்கு ஏன்என்பாள் — சங்கூரும்
செந்நெல் முகமாலைச் சீர்பெருகும் ஆலயத்தின்
அன்னை பிலமினம்மாள் தான்

2

அம்பேந்துங் கையால் அரவணைப்பாள் நாதனுக்காய்ச்
செம்பால் மிகச்சொரிந்த சேயிழையாள் — எம்பால்
இருப்பாள் இருந்து இடர்தீர்ப்பாள் நெஞ்சே!
வருத்த முனக்கேன் மகிழ்

3

பட்டாடை சொர்ணமுடி பல்சொகுசும் தான்வெறுத்து
விட்டாள் அரசமனை வீணென்று — துட்டாட்ட
மன்னர்க்கு மன்னன் மணமதனை முன்மறுத்தாள்
கன்னி பிலமினம்மாள் காண்

4

ஆற்றி லெறிந்துமென்ன அம்பாலே எய்துமென்ன
போற்றியே நின்றிட்டாள் பொற்பரனைத் — தேற்றவரு
கன்னி மரியன்னையைக் கண்டாளே கண்டளவில்
இந்நிலத்தை விட்டாள் இகழ்ந்து

5

பல்பிணிகள் நீங்கும் பரனகிர்பை தானேங்கும்
நல்லனவெ லாம்எம்மை நாடிவரும் — தொல்லையில்லை
சந்த பிலமினம்மாள் சாருமுக மாலைக்கோர்
சந்தோஷ யாத்திரைசெய் தால்

K. K. S.
ஆசிரியர், மிருசுவில்

காலத்திற்போல உணவருந்திக்கொண்டிருந்ததைப் பார்த்தோருக்கும் இளமையுணர்சசி உண்டாயதெனில் மிகையாகாது. இக்கூட்டம் இன்னும்சிறிதுபொழுதில் கலையவேண்டியிருந்தாலும் அதன்செயல்கள் கல்லூரித்தலைவர் சுவாமிகளின் அயாரஉழைப்பினால் சிறப்பாகத் தற்போதைய மாணவருக்கும், பொதுவாக வடமத்திய மாகாணத்துக்கும் மிகுந்தநன்மை புரியுமென நம்புவதாயும், கடந்த 56 ஆண்டுகளாகப் பெருமையுடன் திகழ்ந்தஇத்தகைய கல்லூரிக்குப் புது உணர்ச்சியையும், ஆதரவையும் இச்சங்கம்உண்டுபண்ணுமென உறுதிகூறுவதாயும் பகுதிநீதிபதியும், பிரதமவிருந்தாடியுமான திரு. பி. ஜி. எஸ். டேவிற்அவர்கள் கூறினார். ஈற்றில் கல்லூரித்தலைவரவர்களின் நன்றிக்குறிப்புரையுடனும், வயதுமுதிர்ந்த மாணவர்களின் அன்புணர்ச்சியுடனும் கிட்டத்தட்ட மாலை 9-30 மணியளவில் யாவரும் தத்தமில்லமேகினார்கள்.

— நிருபர்

## முத்தித்திறவுகோல்

எம்மிடத்தில் தற்போது விற்பனைக்குத் தயாராகிவிட்டது. தேவையானோர் மேல்வரும் விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

| விலை பிரதி : | ரூ. ச. |
|---|---|
| தோற் கட்டு : | 3—50 |
| கலிக்கோக் கட்டு : | 2—50 |

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

● எட்டுப்பிள்ளைகளைஉடையவரும், தாரமிழந்தவருமான 73 வயதுடைய வண. ஜெறூட் பைக்கர்அவர்கள் றோமாபுரியிலே சமீபத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவருடையபுதல்வர்களில் மூவர் யேசுசபைக்குருமாராய் இருந்துவருகின்றனர். இவர் சமீபத்திலே பிரான்சிய கமறூன்ஸ் நாட்டிலுள்ள குஷ்டரோகர்களது குடியேற்றதலத்தின் புரோக்... செல்லவிருக்கின்றார்.

## புதியமணிகளும் மாதாதிருநாளும்

போளவத்தை உத்தரியமாதா கோவில் கட்டளைக்குரவரான அதிவண. U. களமென்ற் பெர்னண்டோ Mis. Ap. அவர்களால் அக்கோவிலுக்கென நவமாகத் தருவிக்கப்பட்ட பெரிய மூன்றுமணிகளையும் ஆசீர்வதிக்கும் பொருட்டுச் சலாப மேற்றிராணியாரான மகாவந். எட்மண்ட் பீரிஸ் ஆண்டவர்அவர்கள் கடந்த 7-8-54-இல் அங்கு எழுந்தருளலாயினர்.

அவ்வமயம் ஊரவருடன் பரோபகாரிகளான அநேகர் பெருந்திரளாகக் குழுமிநின்றுபாண்ட்வாத்தியம்முழங்க, பெண்பாலார் கூட்டங்கூட்டமாகக்கூடி ரபானை அடிக்கப் பெரு ஆரவாரத்தோடு மேற்றிராணிஆண்டவரை வரவேற்றனர். பின் திரு. பிறஞ்சிஸ் B. பெரோரா தம்பதிகளும், திரு. தோமஸ் பெர்னண்டோ தம்பதிகளும், திரு. W. அலெக்சாண்டர் பெரோரா தம்பதிகளும் முறையே மூன்றுமணிகட்கும் ஞானத்தந்தையராய் நிற்க அவைகள் ஆசீர்வதிக்கப்படலாயின.

மேலும் அக்கோவிற்றிருநாள் 14-ம், 15-ம் திகதிகளில் வெகுபக்திவிமரிசையாகக் கொண்டாடப்பட விருக்கிறது. 14-ந்திகதி மாலை 8மணிக்கு வேஸ்பர் சடங்கும், 15-ம் திகதிகாலை 6.30, 8.30மணிக்குத் திவ்விய பூசைகளும் நிகழும். அன்று பிற்பகல் 3மணியளவில் மாதாசுரூபம் சுற்றுப்பிரமாகக் கொண்டுபோகப்பட்டுச் சற்பிரசாத ஆசீர்வாதத்தோடு திருநாள்முடிவுறும். மாதாபக்தர்கள் திருநாளிற் பங்குபற்றிப் பரலோக இராக்கினியின் ஆசிபெற்று ஏகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். — நிருபர்

● ஜப்பானியதேச ஹிரோஷிமா நகரிலே 1945-ம் ஆண்டு முதலாவது அணுக்குண்டு வீசிய ஒன்பதாவது வருட நிறைவுதின ஞாபகார்த்தமாகச் சென்ற 6-ந் திகதியன்று மூன்றுலட்சம்மக்கள் அங்கு மௌனசாதனைசெய்தார்கள். அந்தமுதலாவது அணுக்குண்டுவீச்சில் இரண்டுலட்சம் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் மாண்டுபோனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

ஒருஊரிலே ஒருமனிதன் இருந்தான். அவன் வியாபாரஞ் செய்து பிழைக்க விரும்பினான். அவன் ஒருகுடத்திற் கடல் தண்ணீர் அள்ளி அதை விற்கும்படி தெருத் தெருவாய்க் கூறிக்கொண்டு போனான். "கடல் தண்ணீர் வேணுமா, கடல் தண்ணீர்? கடல் தண்ணீர் வாங்கவில்லையா?"

இவன் கூறியதைக் கேட்டவர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். சிறுபிள்ளைகள் அவன் பிறகே சென்று கேலி பண்ணினார்கள்.

நரைத்த தாடியுள்ள ஒருநல்ல மனிதன் அதைக் கண்டு, வியாபாரி நல்லபணஞ் சம்பாதிக்க வேணுமென்றால் நல்ல தண்ணீர் அள்ளிவந்து விற்கவேணுமென்று சொன்னான். வியாபாரி அப்படியே செய்து அதிகபணஞ் சம்பாதித்தான்.

நீங்கள் ஒவ்வொருவரும் வியாபாரிகள். உங்களைச் சந்திக்கும் ஒவ்வொரு வருக்கும் உங்களை விலைப் படுத்துகிறீர்கள். முறைப்பாடுகள், குறைபாடுகளையும், கஷ்ட நஷ்டங்களையும், நோவு வலிகளையும் மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்பினால் ஒருவரும் வாங்கமாட்டார்கள். இவைகள் எல்லாரிடத்திலும் ஏராளமாய் உண்டு.

ஆனால், இவைகளைக் குறைக்கும் வழிகளைச் சொன்னால் குறைக்கப் பிரயாசப் பட்டால் எல்லோரும் உங்களை விரும்பித் தேடுவார்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## பட்டம் பாப்பா

I

பட்டம் ஒன்று பறக்கிறதே பாருபாப்பா — அது
பறந்து வானில் ஆடிடுதே பாருபாப்பா
இட்டப்படி காற்றினிலே ஏறுதேபாப்பா — அது
ஏறிஏறி வானமதைச் சேருதேபாப்பா

II

பட்டத்தினைப் போலநீயும் பறந்திடுபாப்பா — இந்தப்
பாரினிலே வாழ்க்கைதனில் உயர்ந்திடுபாப்பா
கட்டடங்கள் பலதையுமே கடந்திடுபாப்பா — நீயும்
கலங்கிடாத நெஞ்சமதை அடைந்திடுபாப்பா

III

பறந்துதிரியும் பட்டத்திற்குக் காற்றினைப்போலே — நல்ல
பண்புடைய மக்களுக்குச் சத்தியம்பாப்பா
சிறந்தநல்ல வாழ்வினுக்குச் சின்னமாம்பாப்பா — அதி
சீரியநல் ஒழுக்கமதைச் சிந்திப்பாய்பாப்பா

IV

ஆடிச்சோர்ந்து கீழேவிழும் பட்டத்தைப்பாப்பா — இங்கு
ஆசையோடு பார்ப்பவரும் இல்லையேபாப்பா
ஓடிநீ உழைத்திடாது ஓய்ந்திடில்பாப்பா — பூவில்
உன்னையுமே பார்த்திடார்கள் உண்மையேபாப்பா

ஆர். சி. பாடசாலை
முதலியாகுளம்

ச. செசிலியம்மா

## சிஸ்றர்சாராவும் நாஸியகட்சியினரும்

1944-ம் ஆண்டு ஹங்கேரிய நாட்டில் பரந்த நாஸியகட்சிக் கொள்கையிலிருந்து அநேகரைச் சிஸ்றர் சாரா காப்பாற்றினார். தங்களுக்கு எதிராக வேலைசெய்து வருகின்ற அந்தக்கன்னியாஸ்திரிக்கு நல்லபாடம் படிப்பிக்க வேண்டுமென்று நாஸியகட்சித் தலைவன் ஒருநாள் கட்டளை யிட்டான். அதனால் சிஸ்றரைப் பிடிக்கத் தேடினர்.

இவர் புடாபெஸ்ற் நகரத்தி லிருந்த கன்னியர் மடத்தில் நித்திய வார்த்தைப்பாடு கொடுக்கும்போது மரணமட்டும் தான் அனுபவிக்கப் போகிற கஸ்திகள், வாதைகள், துன்பதுரிதங்கள் யாவற்றையும் பாவிகள், அஞ்ஞானிகள், பதிதர், பிரிவினைக்காரர் மனந்திரும்ப ஒப்புக்கொடுப்பதாகத் தீர்மானித்தார். நாளுக்குநாள் உத்தமதனத்தில் வளர்ந்து சாங்கோபாங்க உச்சியை நோக்கி நடந்தார். இவரிடம் விளங்கிய தேவநேசம், ஆத்துமவாஞ்சை, விவேகம் முதலாம் மேலான குணங்களைக் கவனித்துவந்த மேற்றிராணியார் இவரை ஓர் புதிய கன்னிகாசபையின் தலைவியாக நியமனஞ்செய்தார்.

அதனால் யூத இளம் பெண்களைச் சேர்த்து ஓர் கன்னிகாசபையை அடியிட்டுத் தலைவியாக இருந்து அதனை நடத்திவந்தார். பெருந் தொகையான இளம் யூதப்பெண்கள் தங்களிடமிருந்து பறிக்கப்பட்டுச் சிஸ்றர் சாராவைத் தேடி ஓடுவதையும், அவரது புத்திபோதனைப்படி நடப்பதையும் நாஸிய கட்சியினர் அவதானித்து வந்து, ஓர் நாள் திடீரென அந்தமடத்தை வளைந்து கொண்டனர். அங்கு இருந்த கன்னியரையும், மற்றும் பெண்களையும் ஒரு அறையில் பிடித்து அடைத்துப் பூட்டினர்.

சிஸ்றர் சாராவையும், இரு பணிப் பெண்களையும் பிடித்து வாருங்கள் என்ற சட்டளை பிறந்தது. இதைக் கேட்டதும் சிஸ்றர் வந்தவர்களைப் பார்த்து: "உங்கள் எதிரி நான்தான்; என்னைப் பிடியுங்கள்; மற்றவர்களைச் சந்தோஷத்தோடு போகவிடுங்கள்" என்றார். சிஸ்றரை விலங்குமாட்டிச் சிறைச்சாலை கொண்டு சென்றனர். அங்கு புறப்படுமுன் அவர் தனது பிள்ளைகளைக் கடைசிமுறையாகப் பார்த்துவிட்டு: "சர்வேசுரனுக்குப் புகழ்ச்சி உண்டாவதாக" என்றார். எல்லோரும் ஒரேகுரலாய் "இப்போதும், எப்போதும், அனவரதகாலமும் உண்டாவதாக" என்றனர்.

சிஸ்றர் சிறைச்சாலைக்குக் கொண்டு போகப் பட்டு ஒருசிறு அறையில் இருந்த சுரங்க வாயில் வழியாக டான்யூப் நதியில் எறியப் பட்டார். அதன் மேல் அவரைப் பற்றிய விபரம் ஒன்றுமே தெரியாது. அவரின் சரீரத்தையும் காணமுடியவில்லை. அவர் தனது பிள்ளைகளுக்குச் சொன்ன கடைசி வார்த்தையே அவர் கொடுத்த மரண சாதனம். "தேவன் புகழப்படக் கடவாராக."

M. J. M.

## கோயிலுக்குப் போனவன்

தங்களை விடத் திறமானவர்கள் இல்லை என்று நினைக்கிறவர்களுக்கு ஓர் உவமை சொன்னார் யேசு.

இரண்டுமனிதர் கோயிலுக்குப் போனார்கள். ஒருவன் பரிசேயன். மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நடுக்கோயிலில் நின்று கொண்டு: "ஆண்டவரே! நான் மற்ற மனிதர்களைப் போன்றவன் அல்ல; கொள்ளை அடிக்கிறதில்லை; அநியாயஞ் செய்கிறதில்லை; விபசாரத்துக்குப் போகிறதில்லை ......; (யாரும் கேட்டுக் கொண்டு நிற்கிறார்களோ என்று அறியத் திரும்பிப்பார்த்தான். ஆயக்காரனைக் கண்டான்.) இந்த ஆயக்காரனைப் போலுமல்ல; இதற்காக உமக்கு நன்றிகூறுகிறேன்."

மேலும் தொடர்ந்து சொல்லுவான்: "கிழமையில் இருமுறை விரதம்பிடிக்கிறேன்; என் விளைவுகளில் பத்தில் ஒன்று கொடுக்கத் தவறுவதில்லை."

ஆயக்காரனோ தனது இல்லாண்மையையும், தான் பாவி என்றதையும் உணர்ந்தவன். "ஆண்டவரே! பாவியாயிருக்கிற அடியேன்பேரில் இரக்கமாயிரும்" என்று மன்றாடினான்.

மன்றாடப்போன பரிசேயன் தனது பெருமையைப் பறையடித்து மகிழ்ந்து கொண்டான். கடவுளுக்குத் தன்னைத் தேவையென்று நினைத்தான். ஆயக்காரன் கடவுள் தனக்குத் தேவையென்று உணர்ந்தான். ஆயக்காரன் புனிதம் அடைந்து வீடுசென்றான்.

"தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று யேசு முடிபு சொன்னார்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## கண்டு பிடியுங்கள்

திருச்சபையில் உள்ள சில அர்ச்சியசிட்டர்கள் நெருங்கிய இனபந்துக்கள். கீழே தந்திருக்கும் அர்ச்சியசிட்டர்களின் முறைகளைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்.

1. அர்ச். மொனிக்கம்மாளும், அகுஸ்தீனும்
   (கணவன் மனைவியா? தாயும் மகனுமா? அக்கா தம்பியா?)
2. சுவீடன் தேசத்தவரான அர்ச். விறிசித்தம்மாளும், சத்தறீனும்.
   (சகோதரிகளா? மாமியும் மருகியுமா? தாயும் மகளுமா?)
3. அர்ச். கொஸ்மாவும், தமியானும்.
   (தகப்பனும் மகனுமா? மைத் [illegible] சகோதரரா?)
4. அர்ச். மார்க்கும், பர்ணபாசும்.
   (மச்சான்மாரா? மாமனும் மருகருமா? சகோதரரா?)
5. அர்ச். ஆசீர்வாதப்பரும், ஸ்கொலாஸ்திக்கம்மாளும்.
   (தாயும் மகளுமா? அண்ணனும் தங்கையுமா? மருகரும்,மாமியுமா?)
6. அர்ச். பெரிய பசிலும், நிஸ்ஸா கிறகோரியாரும்.
   (சகோதரரா? மைத்துனரா? தகப்பனும் மகனுமா?)
7. அசிசிப்பதியைச் சேர்ந்த அர்ச். கிளாராவும், அக்கினேசும்.
   (தாயும் மகளுமா? மைத்துனிகளா? சகோதரிகளா?)
8. அர்ச். செசிலியாவும், வலேரியானும்.
   (மைத்துனர் மைத்துனியா? புருஷன் மனைவியா? அண்ணன் தங்கையா?)
9. ஹங்கேரி தேசத்து அர்ச். எலிசபேத்தும், எட்வீசும்.
   (மாமியும் மருமகளுமா? சகோதரிகளா? தாயும் மகளுமா?)
10. சுவிசேஷக அருளப்பரும், சந்தியோகுமையோரும்.
   (மாமனும் மருமகனுமா? சகோதரரா? மச்சான்மாரா?)

## சரியான விடைகள்

### கணிதப்பகுதி

1. கோழிகள் 19. தோடம்பழம் 1. மாம்பழம் 80.
2. ஒன்றுமில்லை.
3. 6 கால்கள்.
4. ஒருவர்.
5. பூனைகள் 4.
6. அணில்கள் 16.
7. 119. 959-உம வரும்.
8. 5 மூலைகள்கொண்ட நட்சத்திர வடிவம். (படம்)
9. 128 பழங்கள்.
10. கத்தரிக்காய்கள் 25. 106-உம் வரும்.

கணக்குகள் பத்திற்கும் சரியான விடைகள் கொடுத்தவர்களின் பெயர்கள் வருமாறு:

1. ஏ. எவ். குணரத்தினம், கரவெட்டி.
2. பே. இமெக்கிலேற், சி. பு. ஆ. பாடசாலை, ஊர்காவற்றுறை.
3. வ. ம. செல்வரத்தினம், கரவெட்டி.
4. வ. அன்னம்மா, கரவெட்டி.

(அடுத்த பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. (பெயர் கிடையாது) மாதகல்.
6. ச. செசிலியம்மா, றோ. க. பாடசாலை, முதலியாகுளம்.
7. பிலிப் மிக்கேல், புங்குடுதீவு.
8. க. ஜேம்ஸ், றெக்கிளமேஷன், யாழ்ப்பாணம்.
9. ச. கீதபொன்கலன், றோ. க. பாடசாலை, சில்லாலை.
10. எஸ். வேபினு செலன், மாதகல்.
11. எஸ். பத்திநாதன், மாதகல்.
12. நீ. மரியருளானந்தம், சென் றீற்றாஸ், இளவாலை.
13. அ. திருச்செல்வம், சென் றீற்றாஸ், இளவாலை.
14. மாட்டின் மாக்கஸ், த. க. பாடசாலை, சுடாப்பாடு, நீர்கொழும்பு.
15. ச. ஜெம்மா யஸ்மினு, 'இமெல்டா லொட்ஜ்' சில்லாலை.

## நல்ல பாடம்

அன்று மாலை நேரமே
அயர்ந்து தூங்கும் வேளையே
படுக்கை யில்ப டுத்தநான்
பறந்து சென்றேன் எங்கேயோ
கரிய அந்த இருளிலே
கண்டனன் ஓர் உருவமே
தலைகால் இன்றி அதுவுமே
தத்தித் தத்தி வந்ததே
உருப் படைத்த உருவினை
ஊன்றி நோக்கிப் பார்க்கவே
கரிய பெரிய பூதம்போல்
காட்சி தந்த தென்றுனே
தேக முழுதும் சிலிர்த்தது
தேம்பித் தேம்பி அழுதனன்
உதவி தன்னை நாடினேன்
ஒருவர் துணையும் கண்டிலேன்
செய்வ தின்ன தென்றுநான்
சிந்தித் தாற்று திறுதியாய்ச்
சடுதி ஓட்டம் பிடிப்பதே
தக்க தென்று எண்ணினேன்
எட்டுத் திக்கும் நோக்கியே
எட்டி எட்டி ஓடினேன்
கலையைப் போல ஓடினேன்
கரிய உருவந் தொடரவே
கடிதிற் சென்ற என்னையே
கல்லு ஒன்று தடக்கவே
பதறி வீழ்ந்த என்னிலே
பாய்ந்த தந்த உருவமே
அஞ்சி நானும் உதறியே
ஐயோ என்று அலறினேன்
கண்வி ழித்துப் பார்க்கையில்
காட்சி ஒன்றுங் கண்டிலேன்
கண்ட காட்சி கனவெனக்
கணத்தில் எண்ணம் உதித்தது
கொடிய அந்தக் காட்சியின்
கொடுமை தன்னை உணர்ந்தனன்
நித்தஞ் செய்யுஞ் செபத்தையே
நிறுத்திக் கண்ட பலன் இது
நாளும் செபத்தை இனிவிடேன்
நல்ல பாடம் இதுவன்றோ!

ஏ. திருச்செல்வம்,
சென் றீற்றாஸ், இளவாலை.

## அரசாங்க அறிவித்தல்
### வனபரிபாலனப் பகுதி

N. 2138 — 21-8-54 காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் 100 கூறுகள் அடங்கிய புதிய முதிரை, பாலை, முணைமரங்களும், 10 கூறுகள் அடங்கிய அரிந்தமரங்களும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனவுக்கு முன் அவற்றைப்பார்க்க விரும்புவோர் டிப்போக்கீப்பரின் அனுமதியோடு பார்வையிடுவதுடன், அவரிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்துகொள்ளல்வேண்டும்.

### நன்றியறிந்த தோத்திரம்

நான் சகாயமாதாவிடம் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப் பெற்றேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கின்றேன். அவவுடையநாமம் எங்கும் புகழப்படுவதாக. S. S. S.

## மணிமொழிகள்

- உனது ஆஸ்தியைக்கொண்டு தருமங்கொடு —(யோபு. 4: 7.)
- தருமங்கொடுத்து உன்பாவங்களுக்குப் பரிகாரஞ் செய். —(தானி. 4 : 24.)
- கொடு, உனக்குக் கொடுக்கப்படும் —(லூக். 6 : 38.)
- தருமங் கொடுக்கும்போது உன்வலதுகைசெய்வதை இடதுகை அறியாதிருக்கக் கடவது —(மத். 6 : 4.)
- இரக்கமுடையவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கம்அடைவார்கள். —(மத். 5 : 7.)
- தனக்காக ஆஸ்திக்காரனுயிராமல் ஏழைகளுக்காக ஆஸ்திக்காரனுய் இருப்பவனே திருச்சபையின் மெய்யான ஆஸ்திக்காரன். — (அர்ச். அம்புறோசியார்.)
- ஏழையை நிந்தியாதே; ஏனெனில், உன்னைஐசுவரியவான் ஆக்குபவன் ஏழையே. —(அர்ச். அம்புறோசியார்.)
- மோட்சத்தின் திரவியசாலை ஏழையின்கை. — (அர்ச். கிரிசோலொக் இராயப்பர்.)
- ஏழைக்கு உன்பணத்தைக்கொடு; மோட்சம் உனக்குக்கொடுக்கப்படும். —(அர்ச். மெதோடியுஸ்.)
- உன்னையன்றி உன்னைப்படைத்தகடவுள் உன்னையன்றி உன்னை இரட்சிக்கமாட்டார். —(அர்ச். அகுஸ்தீன்.)
- உலககாரியங்களில் நமதுநாட்டத்தை வைப்பது சுத்தமதியீனம். ஏனெனில், எவ்வளவுக்கு நாம்அவைகளைச் சிநேகிப்போமோ, அவ்வளவுக்கு நாம்அவைகளை மரணசமயத்தில் விட்டுப்பிரியும்போது வெகுகஸ்தி அனுபவிப்போம்.
- தேவபயமே ஞானத்தின்ஆரம்பம். ஞானத்தையும், போதனையையும் மதியீனர் புறக்கணிக்கிறார்கள். —(பழ. 1 : 7.)
- மகனே, ஆண்டவருடையகண்டிப்பை அலட்சியம்செய்யாதே. ஏனெனில், ஆண்டவர் யாரைநேசிக்கிறாரோ அவனைக்கண்டிக்கிறார். தந்தை தன்மகனிடம் சந்தோஷங் கொள்வதுபோல அவரும்உன்னிடம் சந்தோஷங்கொள்ளுகிறார். — (பழ. 3 : 11, 12.)
- ஞானமுள்ளபுதல்வன் தன்பிதாவைச் சந்தோஷப்படுத்துகிறான். ஆனால், மதிகெட்டமகனோ தன்மாதாவுக்குக் கஸ்தியைவருவிக்கிறான். — (பழ. 10 : 1.)
- ஆண்டவருடைய ஆசீர்வாதம் நீதியின்சிரசின்மீது இருக்கும். அக்கிரமிகளின்வாயில் அநீதம் மறைந்திருக்கும்.—(பழ. 10:6.)
- ஆண்டவருடைய கற்பனைகளை அனுசரித்துநடக்கும் பரிசுத்தவான்களின் பாக்கியமே பாக்கியம். —(சங். 118 : 1.)
- கெட்டசகவாசம் நல்லொழுக்கத்தைக் கெடுத்துவிடும். — (கொரி 15 : 33)
- உன்னுடைய ஆண்டவராகிய சர்வேசுரனை உன்முழு இருதயத்தோடும், முழுஆத்துமத்தோடும், முழுமனதோடும், முழுப்பலத்தோடும் சிநேகிப்பாயாக. —(மத். 12 : 30, 31.)



முகமாலை
அர்ச். பிலோமினம்மாள்
### திருநாள்

**ஆவணிமாதம் 23-ந் திகதி**
மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம்.
**ஆவணிமாதம் 24-ந் திகதி**
காலை 7 மணிக்குத் திருநாட்பூசை. பின்னர் சுற்றுப்பிரகாரம்.
22-ம், 23-ம், 24-ம், 25-ம் திகதிகளில் றெயின்வண்டிகள் கோவிலுக்கு முன்பாகத் தரிக்கும்.

Rev. Fr. J. A. Francis, O. M. I.,
St. Francis Xavier's Church,
Nallur.

யாழ்ப்பாணம்
### அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

இத்திருநாள் கொண்டாட்டம் நிகழும் ஆவணிமாதம் 16-ந் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந் திகதி வெள்ளிக்கிழமை முடிவாகும்.

P. T. ஜேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரவர்.

## சந்தேகம் தீர்ந்தது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதாவும் வளனும் சேசார் அகுஸ்தீஸின் கட்டளைக்குப் பணிந்து எண்ணும் இறையும் ஈவதற்காகப் பெத்லகேம் செல்கின்றனர். வழியிலே காந்தாரி என்னும் விலைமாதைக் காண்கின்றனர்.

"தீய்கலந்த சிதைவுடைப் பேதையை
நோய் கலந்த வுயிர்ப்பொடு நோக்கினுள்"

பாவமும், கேடும் கொண்ட அந்தப் பேதையை மாதா பெருமூச்சுடன் நோக்குகிறாள். அந்த ஆத்துமத்திலே குடிகொண்டிருக்கும் பிசாசுகளையும், பாவக்கேட்டையும் தன்பத்தாவுக்குக் காட்டுகிறாள். அவரும் காந்தாரியைக் கண்டிரங்கி அவற்றை ஓட்டும்படி தேவதாயைப்பார்த்து வேண்டுகின்றார். கன்னிகை கனிவோடு காந்தாரியை நோக்குகின்றாள். என்ன ஆச்சரியம்! அந்தப்பார்வையோ அவள் மனத்தை மாற்றுகிறது. மனஸ்தாபத்தை வருவிக்கிறது. அவளிடத்தில் குடியாயுறைந்த பிசாசுகள் ஓலமிட்டுக்கொண்டு நரகபாதாளத்தை நோக்கிச் சென்றடைகின்றன. காந்தாரி கன்னிகையின் அடிமை ஆகின்றாள்.

"நின்னை மறந்தாய் நெஞ்சே
நெடுங்கோல் நீதி வல்லோன்
தன்னை மறந்தாய் நெஞ்சே
தழலத் தழல்கீழ் உலகுய்த்(து)
என்னை மறந்தாய் நெஞ்சே
இனிமுன் விழைந்த(து) எல்லாம்
பின்னை மறப்பாய் நெஞ்சே
என்னுப் பெரிதார்த்(து) அழுதாள்"

என்று காந்தாரியின் மனமாற்றத்தையும், கன்னிமரியாயின் கருணைப்பெருக்கையும பாகவதர் பாடிக்காட்டலானார். மீண்டும் சொல்வார்: "பிள்ளைகளே! காந்தாரிக்குக் கிடைத்த அரியபேற்றைக் கண்டீர்களா? மாதாவை எதிர்பாராதவிதமாய் அவள் சந்திக்க நேரிட்டதால் அல்லவா அவள் புண்ணியவதியானுள். இவ்வுலகில சீவித்தபோதே மாதா பாவிகளைத்தேடிப்போய் அவர்களின் மனதைமாற்றிப் புண்ணியநெறியில் அவர்களை வளர்த்து வரலானுள். அதுபோல மோட்சாரோபணமான பின்னும் பலதிவ்வியதலங்களில காணப்பட்டுப் பாவிகளுக்கு எண்ணிறந்த நலன்களைச் செய்துவருகின்றார். அவர் காட்சிதந்தருளிய இடங்கள் எல்லாம் புண்ணியதலங்களன்றோ! அப்புண்ணிய தலங்களைத் தரிசிப்பது நமக்கும் மனந்திரும்ப நல்லசந்தர்ப்பத்தை அளிப்பனவாமன்றோ!"

உணர்ச்சிமிக்க இச்சம்பவம் சபையோரை மெய்மறக்கச் செய்தது. தோமஸ் சித்திரப்பாவைபோல் ஆகிவிட்டான். எதிர்பாராதவிதமாய் அன்று நடந்த கதாப்பிரசங்கம் அவன் மனத்திலே எழுந்தபுயலை அமர்த்தி நின்றது. பாகவதர் மேலும் தொடர்ந்து பிரசங்கத்தை நடத்தினர். ஆயினும் தோமஸால் பிரசங்கத்தைத் தொடர்ந்துகேட்க முடியவில்லை.

காந்தாரியின்உள்ளம் மாறியது போலத் தோமஸினுடைஉள்ளமும் மாறுதலடைந்தது. சந்தர்ப்பமே மனித வாழ்க்கையில் முக்கியமானது என்ற முடிவுக்குவந்தான். மாதாவின்எதிர்பாராத சந்திப்பும், நோக்குமல்லவா காந்தாரியை இரட்சித்தது. ஆண்டவரின் வலதுபக்கத்திலே சிலுவையில் அறையப்பட்ட கள்ளனும் சந்தர்ப்பவசத்தால்அல்லவா இரட்சிக்கப்பட்டான். யாத்திரைத்தலங்களும் இந்தவகையில் உதவியளிப்பவைதான். யாத்திரைத் தலங்களில் பாவிகள்மனந்திரும்பப் பல சந்தாப்பங்கள் இருக்கின்றனஎன்பது உண்மைதான்என்ற முடிபுக்கு அவன் உள்ளம் திரும்பியது.

தனது மூடத்தனத்தை நினைந்து தோமஸ் வெட்கமடைந்தான். மடுத்திருப்பதிக்குச் செல்வதற்கிருந்த அருந்தருணத்தைத் தான் இழந்தமை குறித்து மனம்வருந்தினுன். "என் மனதை இப்பிரசங்கம் மாற்றியதுபோல அதிபரின் தீர்ப்பையும் மாற்றியமையாதோ" எனஏங்கிநின்றான். அதிபர் இருந்த திக்கை உற்றுநோக்கினுன். அவரும் அவனைநோக்கினர். இருவர்கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன.

தோமஸ் மடுவுக்குப்போக உத்தரவு கேட்டதும், தான்மறுத்துக்கூறியதும அவர்மனதில் நினைவுக்குவந்தன. திருப்பதியாத்திரையைத் தடைசெய்தமை குறித்துவருந்தினர்.

பிரசங்கம் முடிந்தது. எல்லாரும் வகுப்புக்குச் சென்றார்கள். அதிபர் தோமஸைக்கூப்பிட்டார். "நீ மடுவுக்குப்போய்வரலாம்; இன்று பாடசாலைக்குப் போகவேண்டியதில்லை" என்றார்.

● சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி பரமபதமடைந்த 8-ம் ஆண்டு நினைவுஞாபகதினம் சென்றஆடிமாதம் 28-ந்திகதி பாரனங்கானத்தில் வழமைபோலக் கொண்டாடப் படலாயிற்று. இவள் பாரனங்கானத்திலுள்ள கிளாரம்மாள் மடத்தில் 1949-ம் ஆண்டு ஆடிமாதம் 28-ந்திகதியன்று தனது 36-ம் வயதில் மரணமாயினுள்.

● சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனிய கம்யூனிஸ்தர்கள் விஞ்ஞான அறிவைப் பரப்புஞ் சங்கமென்று ஓர்புதியஸ்தாபனமொன்றை அமைத்திருக்கிறார்கள். ஆனுல், அதன்நோக்கம்முழுவதும் விஞ்ஞான் அறிவென்ற போலிவேஷத்திலே நாஸ்திகத்தைப் பரப்புவதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத வினுவிடை

### — VIII —

### ஆவியானவர் எங்களை அர்ச்சிப்பவர்

### 7. நீதி

(முன் தொடர்ச்சி)

**155.** சமூக நீதியும் அதற்கு விரோதமான பாவங்களும் ஆனவை என்ன ?

புருஷன், பெற்ருர், எசமான், அரசன், குருஆகிய சபைத் தலைவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளைச் செலுத்துவதே இறைச் சமூகநீதியாம். மனைவி, பிள்ளை, ஊழியன், பிரசை, விசுவாசி ஆகிய சபை அங்கத்தவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளைச் செலுத்துவதே பங்கிடும் சமூக நீதியாம். அமைச்சலீனம், வரிப்பணம் மறுப்பு, தகுதியில்லாதவரைத் தெரிதல், துரோகம்செய்தல் முதலியவை இறைச்சமூக நீதிக்கு விரோதமான பாவங்களாம். ஆதரிக்காமை, தர்மம் மறுப்பு, கைக்கூலிவாங்கி முகமண் பார்த்தல், கொடுமை செய்தல் முதலியவை பங்கிடும்சமூக நீதிக்கு விரோதமான பாவங்களாம்.

"செசாருடையவைகளைச் செசாருக்குச் செலுத்துங்கள்"—மத். XXII. 21.

"பிறர்மட்டில் அதிகாரம் பண்ணுகிறவர்களே கடினமாய் நடுத்தீர்க்கப்படுவார்கள்"—ஞானு. VI. 6.

**156.** தர்மம் செய்வது நீதிக்கடமையோ அல்லது பிறர்சிநேகக் கடமையோ ?

கடும்ஆபத்திலிருப்பவனுக்கு உதவுவது மாற்று நீதிக்கடமையும், மேலதிகமான சொத்திலிருந்து வறியவர்களுக்குக் கொடுப்பது சமூகநீதிக்கடமையும், சுயபாவனைக்கான சொத்திலிருந்து வறியவர்களின் சாதாரண அவசரங்களில் உதவுவது பிறர்சிநேகக் கடமையுமாம்.

**157.** நாம் எப்படி வேருெருவரினுலே பிறத்தியாருக்கு நஷ்டம் வருவிக்கிறேம் ?

கற்பிப்பதினுலும், புத்திமதி சொல்வதினுலும், தேற்றியோ கண்டித்தோ பேசுவதினுலும், சம்மதிப்பதினுலும், ஏற்றுக்கொள்வதினுலும், பங்குபற்றுவதினுலும், எச்சரிக்கை செய்யாததினுலும், தடுக்காததினுலும், குற்றஞ் சாட்டாதினுலுமாம்.

**158.** பிறருக்கு வருவித்த அநீதிக்குப் பரிகாரஞ்செய்வது நமது கடமையா ?

ஆம். மாற்று அநீதிக்குக் கூடியசீக்காத்தில் ஏலுமானவுடன் பரிகாரஞ் செய்யக் கடமை உண்டு. சமூக அநீதியினுல் மாத்திரம் வருவித்த நஷ்டத்தைப் பரிகரிக்கக் கடமையில்லை ; ஏனெனில், சமூகஅநீதியினுல் மாத்திரம் வருவித்த நஷ்டத்தைச் சரியாய் அளக்கவோ நஷ்டம் அனுபவித்த ஆளைச் சரியாய்க் குறிக்கவோ முடியாது.

"பிறனுடைய வயலைச் சேதப்படுத்தினவன், தன் சொந்த வயலில் எது உத்தமமானதோ அதைப் பரிகாரமாகக் கொடுக்கக்கடவான்"—யாத். XXII. 5.

**159.** பலபேர் ஒத்து வருவித்த நஷ்டத்தைப் பரிகரிப்பது ஆருடைய கடமை ?

நஷ்டத்தை எல்லாரும் ஒத்துவருவித்ததினுல் ஒவ்வொருவரும் தனித்தனிய முழுநஷ்டத்திற்கும் பொறுப்பாளி. ஆகையால் மற்றவர்கள் பரிகரிக்காவிட்டால் ஒருவன் தனிய முழு நஷ்டத்தையும் பரிகரிக்கக் கடமைப்பட்டிருக்கிறுன்.

**160.** நீதிப் புண்ணியத்திற்கு இசைவான ஞானவரம் ஆவது என்ன ?

சருவேசுரனுடைய நீதிப்பிரமாணங்களை உள்ளாராய்வுசெய்து, அந்த ஆராய்வின்படி ஒவ்வொருவருக்கும் சேரவேண்டிய உரிமைகளைச் சரியாய் ஒழுங்குபடுத்தி, அவைகளைப் பிசகின்றிச் செலுத்துவதற்காக ஆவியானவருடைய ஏவுதல்களை ஏற்றுக்கொள்ளப் பண்ணும் நமது நிதானிக்கிற மனசின் பக்குவமே ஞானவரமாம்.

**161.** நீதிப் புண்ணியத்திற்கு இசைவான தபாள, நன்மைத்தனக் கனிகள் ஆனவை என்ன ?

ஆவியானவர் நம்மால் நீதிக்கிரியைகள் சிலவற்றை உத்தமமாய்ச் செய்து முடிப்பதினுல் நமக்கு வருவிக்கும் ஆனந்தமுள்ள [illegible] தபாள, நன்மைத்தனக் [illegible].


## A BOON TO BUILDING CONTRACTORS.

Hard, clean, well-graded coarse metal for concrete buildings, crushed and sorted by modern machinery into varying sizes ranging from 3/16 ins. to 2 ins. and free from dust and inorganic impurities are available in unlimited quantities at competitive rates from K. Cornelis Robert, (Neare St. Isidore's Church) Kalavavadai, Erlalai, Chunnakam. A motorable road leads to the site.

* * *

## சீமெந்துக் கட்டிட ஒப்பந்தகாரருக்கு :

பலவிதமான சீமெந்துக் கொங்கிறீற் கல்லுகள் செய்வதற்குஏற்ற பலமானதும், துப்பரவானதுமாகிய உடை கல்லுகள் தேவைப்படுகிறவர்கள் கீழ்காணும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். பலவிதமான அளவிலும் கல்லுகள்உண்டு. $\frac{3}{16}$ அங்குலம்தொடக்கம் 2 அங்குலம்வரையும் எடுக்கலாம்.

இந்தக்கல்லுகள் விசேஷ தற்காலிக இயந்திரத்தினுல் உடைக்கப்பட்டுத் தூசிபடியாமல் தனிசுதனிசாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. விலைவிபரம் முதலியவற்றிற்குக் கீழ்க்காணும்விலாசத்துக்கு எழுதினுல் அறிந்துகொள்ளலாம்.

கே. கொர்னெலிஸ் ருெபேட்ஸ்,
(அர்ச். இசிதோர்கோவில் அருகாமை)
கலவாவடை, ஏழாலை, சுன்னுகம்.

கவனிப்பு :- கல்லுகள் இருக்குமிடம்வரையும் லொறிகள் செல்லக்கூடியதான ருேட்டுகள் இருக்கின்றன.


## மாரீசன்கூடல்

மாரீசன்கூடலிலே அற்புதவரத்தர் அர்ச். கயித்தான் முனீந்திரர் திருநாளின் ஆரம்பவிழாக்கள் வழமைப்பிரகாரம் இம்மாதம் 3-ந் திகதி செவ்வாயன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தேவாராதனைகளுடனும், கட்டளைக்குரவர் வண. ஹென்றி ஜெஸ்லன்ட் சுவாமி அவர்களின் இனிய பிரசங்க போதனைகளுடனும் சிறப்பாக நடைபெற்றன. 7-ந் திகதி சனிக்கிழமை காலை சுவாமியவர்கள் நிறைவேற்றிய திருநாட்பாடற்பூசையின்போது அர்ச். கயித்தான் முனீந்திரரின் சுகிர்தசரிதையை விளக்கி ஓர்அரிய பிரசங்கஞ் செய்தார். ஈற்றில் பக்தர்குழாம் புடைசூழ, பாடகர்குழாம் இனியகீதங்கள் படிக்க அர்ச்சியசிஷ்டரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம் நடைபெற்றுத் திருநாள் இனிதே முடிவெய்தியது. அதனைத் தொடர்ந்து நாலுநோவனைகளுடன் தேவமாதாவின் ஆரோபணத் திருநாள் இம்மாதம் 15-ந் திகதியும், அர்ச். ருேக்முனீந்திரர் திருநாள் 16-ந் திகதியும் பாடற்பூசையுடன் கொண்டாடப்பட விருக்கின்றன.

— எஸ். எஸ். எஸ்.

## மண்டைதீவு

இம்மாதம் 1-ந் திகதி சம்பேதுரு அப்போஸ்தலர்திருநாளன்று மண்டைதீவிலே கோவில்கொண் டெழுந்தருளியிருக்கும் இந்தஅப்போஸ்தலரின் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. சனிக்கிழமை மாலை 6மணிக்கு வண. ஏ. சார்வே, வண. ஜே. ஸ்கூர்மன், வண. ஏ. மைக்கல்சாமி எனும் குருப்பிரசாதிகள்மூவரும் மாலையாராதனை பாடினர். மறுநாட்காலை 8மணிக்குத் திருநாள் பாடற்பூசை நிறைவேறியது. அவ்வேளை பெருந்திரளானபக்தர்கள் சமூகமாயிருந்தனர். பூசையிலே சிறுபிள்ளைகளுக்கு முதல்நன்மை கொடுக்கப்பட்டது. மாலை சம்பேதுருவானவரின் திருச்சுருப சுற்றுப்பிரகாரம் நடைபெற்று, திருச்சுரூபஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவாயிற்று.

—எஸ். ஜே.

## பெற்ருர்நாட் பெருவிழா

நீர்கொழும்புப் பிரிவைச்சேர்ந்த தோப்புக் கத்தோலிக்க தமிழ் ஆண் பாடசாலைப் பெற்ருர்நாட் பெருவிழா சென்ற 7-8-54 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நன்கு அலங்கரித்துத் தீபாலங்காரஞ் செய்யப்பட்டிருந்த பாடசாலை மண்டபத்தில் கொழும்புமேற்றிராசன பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் அதிவண. நேரியஸ் சி. பெர்ணுண்டோ சுவாமிகள்தலைமையில் விமரிசையாக ஆரம்பமானது. முதலில் மாணவர் வரவேற்புக் கீதங்கள் பாடித் தலைவர்க்கும், மற்றும் பெரியார்கட்கும் மாலைகள் சூட்டியபின், தலைவர் தமது முன்னுரையில் பாடசாலையின் முன்னேற்றத்தைப் பாராட்டிப் பேசினர். தலைமைஆசிரியர் ஜே. வஸ்தியான் சில்வா அவர்களால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டபின் பங்குக்குரவர் வண. ஜே. எட்வின் பெர்ணுண்டோ சுவாமியார் "சமயக் கல்வியின் அவசியம்" பற்றியும், வட்டாரவித்தியாதரிசி திரு. கே. சிவபாதம் அவர்கள் "தொழிற் கல்வியின் முக்கியத்துவம்" பற்றியும், நரக்களிக் கத்தோலிக்க தமிழ்க் கலவன்பாடசாலை ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளை அவர்கள் "பிள்ளைகளை வருங்கால நற்பிரசைகளாக்கப் பெற்ருர், ஆசிரியர் ஒத்துழைப்பின் அத்தியாவசியம்" பற்றியும் இனிய சொற்பொழிவுகளாற்றினர். பின்னர் பாடங்களிலும், வாசிலும், ஞானுபதேசத்திலும், சன்மார்க்கத்திலும், விளையாட்டுப் போட்டிகளிலும் முதன்மை ஸ்தானம் பெற்றமாணவர்களுக்குக் கோவில்மூப்பஞர் திரு. ஜூலான் அண்ணுவியார் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவரின் நடனங்கள், நாடகங்கள், கும்மி, கோலாட்டம், பேச்சுக்கள் என்பன சிறப்பாக நடாத்தப்பட்டு உதவி ஆசிரியர் திரு. சில்வா அவர்களின் நன்றிகூறலுடனும், தேசீய கீதத்துடனும் விழா முடிவுற்றது.

—நிருபர்

● பலஸ்தீனுவிலே பாப்பரசாது கஷ்டநிவாரணவேலைகளைக் கொண்டு நடத்துகின்ற வண. தோமஸ் மைக்மாகன், வண. பீற்றர் ருமேவாகி எனும் அமெரிக்கக் குருசிரேஷ்டர்கள் இருவரும் அகதிகள்மத்தியில் நடத்தும் தொண்டுகளைப்பாராட்டி ஜோர்தான் நாட்டு முதலாவது ஹுசேயின்மன்னர் அவர்கள் இருவரையும் சன்மானித்து மகிமைப்பட்டங்கள் வழங்கியிருக்கின்ருர்.

## ஆக்கவேலைக்கு அணுச்சக்தி

உருளைக்கிழங்கையும், வெங்காயத்தையும் எவ்வளவுகாலம் கெடாமல் பத்திரப்படுத்தி வைக்கலாம்என்று நினைக்கின்றீர்கள்! இரண்டுவாரம்! இரண்டு மாதம்! இல்லை. இரண்டு வருடம் என்று அணுச்சக்தி விஞ்ஞானிகள் செய்துகாட்டியிருக்கிருர்கள்.

அணுச்சக்தியை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்தும் பற்பலபணிகளில் அமெரிக்க ஐக்கியதேசம் வெற்றிகரமாக ஈடுபட்டிருப்பதை வாசகர்கள் அறிவார்கள். அணுசக்திஎன்றவுடன் எண்ணங்களையெல்லாம் அணுக்குண்டுக்குப் பாயவிடக்கூடாது என்பது எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. அணுச்சக்தியை நல்லகாரியங்கள் பலவற்றிற்கு உபயோகிக்கமுடியும். ஜனுதிபதி ஐஸன்ஹாவர் இத்துறையிலே உலகநாடுகள் யாவற்றினதும் ஒத்துழைப்பைநாடுகிருர். நுணகதிர் இயக்கத்தினுல் வெளிப்படும் "காமா" கிரணங்கள் காய், கனி, கிழங்குவர்க்கங்களை அழுகவைக்கும் கிருமிகளை நாசம் செய்துவிடுகின்றன. நுண்கதிர்இயக்கத்தை அணுச்சக்தியைக் கொண்டு நடத்தவேண்டும்.

தற்போது காய், கனிகளை "ஐஸ்" பெட்டிக்குள் வைத்துச் சிலநாட்கள் காப்பாற்றுகிறேம். சிலநாட்கள்தான் அதற்குமேல் இல்லை.

நியூயோக் இராச்சியத்திலே அப்டன் எனுமிடத்திலுள்ள புருக்ஹேவன் தேசியசோதனைக் கூடத்திலே இரண்டுவருடம் கெடாமலிருக்கும் உருளைக்கிழங்குகளைப் பார்க்கலாம். வெங்காயத்தையும் அதேமுறையில் காப்பாற்றி வைத்திருக்கிருர்கள்.

சிறப்பாக மசாசூசற்ஸ் இராச்சியத்திலே கேம்பிரிட்ஜிலுள்ள தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கூடத்தில் உணவுப் பண்டங்களைப் பாதுகாக்கும்துறையில் நவம்நவமான சோதனைகள் நடக்கின்றன. அமெரிக்க இராணுவ உணவு வழங்கும்பகுதியிலும் ஆராய்ச்சி நடக்கிறது. அமெரிக்க அணுச்சக்திக் கம்மிஷன்முன்னின்று நடத்திவைத்துவேண்டியஒத்தாசைகளைச் செய்துவருகிறது. நுணகதிர் ஊட்டப்பெற்ற தின்பண்டங்கள் சுவையில் குறைந்துவிடுகின்றனவா? சமைக்கும்போது பச்சைக் காய்கறிகளின்ருசி எவ்வளவு குறையுமோ அவ்வளவேதானும் இவ்வகையிலும் சுவைக்குறைவு. உணவுப்பண்டங்களை வருடக்கணக்கில் கெடாமல்வைத்துக் கொள்ள முடியுமானுல், உலகமக்கள் யாவருக்கும் இதுபெரிய உபகாரம்என்பதில் சந்தேகம்இல்லை.

● சீனுவிலே பொக்ஷுருடைய கலகத்தின்போது வேதசாட்சிகளாகக் கொலையுண்ட 56 பேருக்கு முத்திப் பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான விசாரணையைத் திருச்சடங்காசார முறைகளின் திருச்சங்கம் ஆராய்ந்து வருகின்றது. இவர்கள் அந்தக்கலகத்தின்போது வேதசாட்சிகளான மூன்ருவதுகுழுவினர். முதலாவது குழுவினர் 1946-ம் ஆண்டு முத்திப்பேறு பெற்றபட்டம் அருளப்பெற்ருர்கள்.

● பிறநாடுகளுக்குப் பொருளாதார, இராணுவஉதவி அளிப்பதற்கெனச் சென்ற ஆடி 1-ந்திகதி ஆரம்பமாகியிருக்கும் அமெரிக்கபுதிய நிதிவருடத்தில் 557 கோடியே 20 லட்சம் டலர்நிதி ஒதுக்கிவைப்பதென அமெரிக்கசெனற்சபையின் நிதிக்கம்மிற்றி சென்ற 6-ந் திகதி முடிவுசெய்திருக்கின்றது. இந்தநிதிவருடம் 1955-ம் ஆண்டு ஆனிமாதம் 30-ந் திகதி முடிவாகும்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 12-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org